# எரிந்த சிறகுகள்

(கவிதைகள்)





வெலிகம ரிம்ஸா முஹம்மத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிந்த சிறகுகள்

(கவிதைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியரின் பிற வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (கணக்கீடு) | 2004 |
| 2. | கணக்கீட்டுச் சுருக்கம் (கணக்கீடு) | 2008 |
| 3. | கணக்கீட்டின் தெளிவு (கணக்கீடு) | 2009 |
| 4. | தென்றலின் வேகம் (கவிதை) | 2010 |
| 5. | ஆடம்பரக் கூடு (சிறுவர் கதை) | 2012 |
| 6. | என்ன கொடுப்போம் (சிறுவர் கதை) | 2012 |
| 7. | பாடல் கேட்ட குமார் (சிறுவர் கதை) | 2013 |
| 8. | இதுதான் சரியான வழி (சிறுவர் கதை) | 2013 |
| 9. | கவிதைகளுடனான கைகுலுக்கல் ஒரு பார்வை (விமர்சனம்) | 2013 |
| 10. | வண்ணாத்திப் பூச்சி (சிறுவர் பாடல்) | 2014 |
| 11. | அறுவடைகள் (விமர்சனம்) | 2015 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிந்த சிறகுகள்

(கவிதைகள்)

வெலிகம ரிம்ஸா முஹம்மத்

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு 2015

எரிந்த சிறகுகள் (கவிதைகள்)

ISBN 978-955-30-6388-9

© வெலிகம ரிம்ஸா முஹம்மத்

பக்கவடிமைப்பு
எஸ்.கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டட்

தட்டெழுத்து, அட்டை வடிவமைப்பு
தியத்தலாவ எச். எப். ரிஸ்னா

வெளியீடு
எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிட்டட்
675, பீ.டீ.எஸ் குலரத்ன மாவத்தை
கொழும்பு- 10.

அச்சுப் பதிவு
சதுர அச்சகம்
69, குமாரதாஸ பிளேஸ்
வெல்லம்பிட்டிய.

17544/2623/250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

இயற்கை அனர்த்தங்களால்
இன்னுயிர் துறந்தோருக்கு
இந்நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இப்போதெல்லாம் கவிதை மீது இளங்கவிஞர்களின் ஈடுபாடு அதிகரித்து வருவதைப் பார்க்கும்போது ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. அதுவும் குறிப்பாக இளம் பெண் கவிஞர்கள் கவிதைத் துறையில் அதிக ஆர்வம்காட்டி வருகின்றனர். தமது எண்ணங்களை அழகிய தமிழ் வண்ணங்களாகத் தருவதற்குக் கவிதை அவர்களுக்குக் கைகொடுக்கின்றது. அவர்களது ஆர்வம் வரவேற்கப்பட வேண்டிய அதேவேளை, கவிதையின் ஆழத்திலும் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும். படைப்புக்கலை என்பது, கலைத்துவத்தோடு சம்பந்தப்பட்டது. தமது படைப்பைக் கலைத்துவத்தோடு வெளிப்படுத்தும் தேவை அவர்களுக்கு உண்டு. அவசரம் கவிதையின் கனதியையும், கலைத்துவத்தையும் கெடுத்து விடக்கூடிய ஆபத்தும் உண்டு.

எரிந்த சிறகுகள் என்னும் இக்கவிதைத் தொகுதியின் ஆசிரியர் கவிஞை வெலிகம ரிம்ஸா முஹம்மத் கவிதை மீது அளப்பரிய ஆர்வம் கொண்டவர். ஏற்கனவே தென்றலின் வேகம் (2010) என்னும் கவிதைத் தொகுதியைத் தமிழ் இலக்கிய உலகுக்கு வழங்கியவர். கவிதைத் துறையில் மட்டுமல்லாது, சிறுவர் இலக்கியத் துறையிலும் அவர் இயல்பான ஈடுபாடு கொண்டவர் என்பதை அடுத்தடுத்து வெளிவந்த அவரது ஆடம்பரக் கூடு (2012), என்ன கொடுப்போம் (2012), பாடல் கேட்ட குமார் (2013), இதுதான் சரியான வழி (2013) ஆகிய சிறுவர் கதை நூல்களும், வண்ணாத்திப் பூச்சி (2014) என்ற சிறுவர் பாடல் நூலும் உணர்த்துகின்றன. அத்தோடு, விமர்சன ஈடுபாடும் கொண்டவர் என்பதை, கவிதைகளுடனான கைகுலுக்கல் ஒரு பார்வை (2013), அறுவடைகள் (2015) ஆகிய அவரது விமர்சன நூல்களும் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றோடு கணக்கியல் தொடர்பான மூன்று நூல்களையும் அவர் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிம்ஸா முஹம்மத் தமது படைப்பாளுமையைப் பல்வேறு ஊடகங்கள் வாயிலாகவும் வெளிப்படுத்தி வருகிறார்.

இக்கவிதைத் தொகுதியில் 54 கவிதைகளும் 7 மெல்லிசைப் பாடல்களும் இடம்பெற்றுள்ளன. இவை பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசுகின்றன. ஆன்மீகம், சமுதாய விமர்சனம், நாட்டுநிலமை, காதல் உணர்வுகள், தனிமனித உணர்வுகள், தனிமனித மேம்பாடு, பெண்ணியம், தொழிலாளர் நிலை, ஏழ்மை, அறிவுரை முதலான பல விடயங்களை ரிம்ஸாவின் கவிதைகள் தொட்டு நிற்கின்றன. அவரது ஆன்மீகக் கவிதைகளிலிருந்து ஒரு கவிதையின் சில பகுதிகளை இங்கு தருகிறேன்.

"ஏழைகள் வாழ்வினை
யாவரும் புரிந்திட
வந்திடும் ரமழான் மாதம்

மானிடர் எங்களை
தூயவராக்கிட
இறையோன் தந்த மாதம்

நன்மைகள் புரிந்திட
நபிவழி நடந்திட
புறப்படும் எங்கள் பாதம்

ஒவ்வொரு அமலையும்
ஒழுங்காய் செய்திட
உரைத்திடும் ரமழான் மாதம்."

அவரது ஆன்மீகக் கவிதைகளோடு இணைந்து அறிவுரைகளும் வெளிவருகின்றன. அதேவேளை, தனியாக அறிவுரை பகரும் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

ஒரு நல்ல படைப்பாளியின் படைப்புகளில் சமுதாய விமர்சனம் நிச்சயம் இடம்பெற்றே தீரும். ரிம்ஸாவின் இத்தொகுதியிலும் அவ்வாறே நிறையச் சமுதாய விமர்சனம் தொடர்பான கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அவரது எல்லாம் மாறிப்போச்சு, என்ன வாழ்க்கை...?, காலங்களின் பிடிக்குள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பனைகள், புன்னகைப்பூச்சு, ஓர் ஊமையின் பாடல், சொல்ல மறந்த சேதிகள், தொடரும் தொல்லைகள், நட்பு என்பது எதுவரை?, வஞ்சகம், இரத்தம் குடித்த காட்டேறி முதலானவை அத்தகையவை.

ரிம்ஸாவின் சமுதாய விமர்சனம் தொடர்பான கவிதைகளுக்கு எடுத்துக்காட்டாகச் சில கவிதைப் பகுதிகளை நோக்கலாம். ஒப்பனைகள் என்ற கவிதை, மனிதர்களின் இரட்டை வேடத்தை அற்புதமாகக் காட்டுகிறது.

"அவர்களின்
முகத்திற்கும் அகத்திற்கும்
சம்பந்தமேயில்லாத பின்
ஒப்பனைகள் மட்டும் எதற்கு
அகற்றிவிடட்டும்."

புன்னகைப்பூச்சு என்னும் கவிதையிலும் சமுதாய விமர்சனம் அழகாக இடம்பெற்றுள்ளது.

"சந்திரனைக் காட்டிக் காட்டி
பொய் கூறியது போதும்
நீ அரிச்சந்திரனாயிரு
மெய்யாய் இனிமேலும்."

கவிஞை ரிம்ஸா சமுதாய விமர்சனத்தை இயன்றவரை கலைத்துவத்தோடு செய்ய முயற்சிக்கிறார்.

காதல் என்பது, இலக்கியத்தில் எப்போதும் இணைந்து கொள்ளும் ஓர் அற்புத உணர்வு. அந்தவகையில் இத்தொகுதியிலும் காதல் கலந்த கவிதைகள் கணிசமாகக் காணப்படுகின்றன. சாதல் நன்றே, உயிர் வாழும் உன் சொந்தம், நினைவிழக்கும் ஆன்மா, விளையும் நினைவுகள், விரைந்தோடி வா, எதிரொலி, கவிதைகளோடு மாத்திரம், எரிந்த சிறகுகள், பொய்மை, சத்தமில்லாத யுத்தம், ஆயுள்கைதி முதலானவை காதல் உணர்வுகளை அழகாக வெளிப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுதியில் உள்ள காதல் கவிதைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விரைந்தோடி வா என்ற கவிதையின் சில பகுதிகளை நோக்கலாம்.

"இறந்தகாலம் முடிந்திற்று
நிகழ்காலமும் கழிந்திற்று
எதிர்காலம் நமக்காக
பன்னீர் தூவி வரவேற்கும்!

என் இளமையின்
பாதங்களில்
உன்னுடைய சுவடுகள்...
கரை தேடும் அலையாக
காதலின் நினைவுகள்!

வாழ்வென்றாலும்
சாவென்றாலும்
உன்னுடனே சேருவேன்..."

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் சில அறிவுரை புகட்டும் முறையில் அமைந்துள்ளன. ஆயினும், கலைத்துவமாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக முரண்பாடுகள் என்ற கவிதையைச் சொல்லலாம். ஆசைகளை மனம் நிறைய வைத்துக்கொண்டு, அதற்கான முயற்சிகள் செய்யப்படாமையை அழகாகச் சொல்கிறது, அக்கவிதை. அதன் ஒரு பகுதியை இங்கு தருகிறேன்.

"நீ கடலில் முத்தெடுக்க
ஆசைப்படுகிறாய் - ஆனால்
மூச்சடக்க அச்சப்படுகிறாய்!

வெற்றிக் கம்பத்தைத் தொட
நினைக்கிறாய் - ஆனால்
தோல்விகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்ட மறுக்கிறாய்!
உயரப் பறக்க கனவு
காண்கிறாய் - ஆனால்
இருந்த இடத்திலேயே
இருந்துகொள்கிறாய்!

வெளிச்சத்தை தேட
நினைக்கிறாய் - ஆனால்
இருளைக் கண்டு
அச்சப்படுகிறாய்!"

கவிஞை ரிம்ஸாவின் கவித்துவத்தை வெளிப்படுத்தும் இன்னொரு கவிதை உண்மை அறிந்தவள் என்ற படைப்பாகும். வீதியோரத்தில் வாழும் ஒரு பிச்சைக்காரியைப் பற்றிய அழகிய கவிதை அது. அந்தக் கவிதையின் ஒரு பகுதி இது.

"வெயிலில் எரிகிறாளா
குளிரில் உறைகிறாளா
உணவு உண்டாளா
உறக்கம் தொலைத்தாளா
என்ன செய்துகொண்டிருப்பாள்?

கைச்சேதப்பட்டு இப்படி ஆனாளா
அல்லது பிள்ளைகள்
கைவிட்டதனால் இப்படி ஆனாளா?

பாதையோரம் அவளுக்கு வீடு
உடைந்த குடை
அந்த வீட்டின் கூரை!

வேளா வேளைக்கு உணவு...
படைத்தவனுக்குத் தெரியாதா
படியளக்க?
ஏதோ சாப்பிடுகிறாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தங்கள் இல்லை அதனால்
சோகங்களும் இல்லை...
பொதியொன்றைத் தவிர
அவளிடம் வேறெதுவுமே இல்லை!
உலகம் நிரந்தரமில்லை என்பதை
உலகுக்கு அறிவிக்கும்
ஞானி அவள்!"

இவ்வாறு பல அழகிய கவிதைகளை இக்கவிதைத் தொகுதி கொண்டுள்ளது. இன்னும் சொல்லக்கூடிய கவிதைகளும் இத்தொகுதியில் நிறையவே உண்டு.

கவிஞை வெலிகம ரிம்ஸா முஹம்மத், தான் ஓர் ஆற்றல் உள்ள படைப்பாளி என்பதை இத்தொகுதி மூலம் இனங்காட்டியுள்ளார். ஏனைய நூல்களுடன் இரண்டு கவிதை நூல்களைத் தந்தவர் என்பதோடு ரிம்ஸா திருப்தி கொண்டுவிடக்கூடாது. ஒரு படைப்பாளிக்குத் திருப்தியற்ற மனம் இருப்பது நல்லது. அப்போதுதான் மேன்மேலும் சிறந்த படைப்புகள் வெளிவரும். வெலிகம ரிம்ஸா முஹம்மத் எதிர்காலத்தில் மேலும் சிறந்த ஒரு படைப்பாளியாக விளங்க எனது நல்வாழ்த்துக்கள்!!!

பேராசிரியர் துரை மனோகரன்
இல 52, சம்மர் பீல்ட்,
பலகொல்ல,
கெங்கல்ல,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சொற்களால் கட்டப்பட்ட கலைவடிவம் கவிதை எனச் சொன்னால் மிகையாகாது. மொழியின் உச்சம் கவிதை. கவிதைக்கும் உரைநடைக்கும் உள்ள வேறுபாட்டை தரமான வாசகன் விளங்கிக் கொள்வான். தமிழ்க் கவிதைக்கு வரலாறு உண்டு. இலக்கியத்துக்குப் பின்னர்தான் இலக்கணம் எனப்பார்க்கும் போது ஓர் ஆக்கத்தின் அமைப்பை வைத்து இலக்கணம் சொல்லல் அல்லது அமைத்தல் என்பதே காலாகாலமாக இருந்து வருமொன்றாகும்.

எழுந்தமானமாகப் பாடப்பட்ட நாட்டார் பாடல்கள் எந்த இலக்கணத்தையும் வைத்துப் பாடப்படவில்லை, மாறாக யாப்பிலக்கணத்தை வைத்துப் பாடப்பட்ட, எழுதப்பட்ட செய்யுள்கள் ஒரு கட்டுக்கோப்புக்குள் நின்று செய்யப்பட்டபோது சுதந்திரமான வெளிப்பாடுகளுக்குத் தடையாக இருந்தன. விதிவிலக்குகளும் உண்டு. கம்பராமாயணப் பாடல்கள் அல்லது செய்யுள்கள் இன்றைய நவீன இலக்கியக் கோட்பாடுகளைக் கொண்டும் விரிவுரை வழங்கக்கூடிய அமைப்பில் உள்ளன.

யாப்பிலக்கணக் கட்டுப்பாடுகளை மீறலானது சுதந்திரமாகச் சொற்களைப் பிரயோகித்துக் கலைவடிவமாக்கல் எனும் நிலை வந்தபோது புதுக் கவிதை வடிவம், வசன கவிதை வடிவம் (Free Verses) என அமையலாயிற்று. ஆயினும் உரைநடைக்கும், கவிதை நடைக்கும் வித்தியாசமான ஒருவித ஓசை அமைப்பு இருத்தல் அவசியம் என்ற கருத்தை மையமாக வைத்து மனப்பதிவை ஏற்படுத்தும் வகையில் உணர்வுபூர்வமான கலை வடிவமாகக் கவிதையாக்கம் அமைதல் சிறப்பானது எனும் வாதம் முன்வைக்கப்படுவதுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை ஓசையுடன் அமைதல் என்பது மனதில் கிரகிக்கப்படும் ஒலி இயைபு (Rhythm) மனனம் செய்வதற்கு இலகுவாக அமைந்து விடுகிறது. அவ்வாறான கவிதை வாசிக்கப்படுகையில் அது கேட்கும் புலனுக்குரியதாகின்றது. மாறாக சொல் இறுக்கத்துடன் கூடிய கருத்தாழமிக்க ஆக்கமானது மனதில் பதிவை ஏற்படுத்தி கட்புலன் மூலம் உள்வாங்கப்பட்டு கவனயீர்ப்பைப் பெறுகின்றது. சில சிறுகதை ஆக்கங்கள் கூட வசன கவிதை வடிவத்தை பெற்று இரசனை மிக்கதாவதற்கு காரணம் இதுவேயாகும்.

சொல்ல வந்த விடயமொன்றை சுருங்கச் சொல்லி விளங்கப்படுத்தலில் கவிதை வடிவம் முதலிடத்தைப் பெறுகின்றது. மிக எளிய சொற்களைக் கொண்டு பெரிய விடயமொன்றைக் கூறவந்த ஔவையாரின் 'வரப்புயர' எனும் செய்யுள் அல்லது பாடல் இதற்கு சிறந்ததோர் உதாரணமாகும். அவ்வாறான சிறப்பிடத்தை நவீன தமிழ்க் கவிதையாக்கத்தில் அமைந்த அநேக தற்காலக் கவிதைகளில் காணக்கூடியதாக இருக்கின்றது. அந்தவகையில் வெலிகம ரிம்ஸா முஹம்மத் எழுதியிருக்கும் 'எரிந்த சிறகுகள்' ஓசை அமைப்புடனும் (உதாரணத்துக்கு - இயைபுத்தொடை, கடை எதுகை இயல்பாகவே அமைந்த 'என்ன வாழ்க்கை?', 'சொல்ல மறந்த சேதிகள்' போன்ற கவிதைகள்) சொல் இறுக்கத்துடன் கூடிய (உதாரணம் 'முரண்பாடுகள்', 'எதிரொலி', 'முரண்' போன்ற) கவிதைகள் கவியாக்கம் பெற்றுள்ளன.

வெலிகம ரிம்ஸா முஹம்மதின் முதல் வெளியீடான 'தென்றலின் வேகம்' கவிதைத் தொகுதி, இப்பொழுது வெளியாகியிருக்கும் 'எரிந்த சிறகுகள்' கவிதைத் தொகுதி ஆகிய இரண்டிலும் காதல், பெண்ணியம், சமூக அவலம், சீதனக் கொடுமை, போர்ச் சூழல், மானுட நேயம் எனும் பாடு பொருள்களில் கவிதைகள் ஆக்கம் பெற்றுள்ளன. சமூகக் கொடுமைகளுக்கு எதிரானதும், இயற்கை அனர்த்தம் பற்றியும், இனவாத யுத்தத்தின் அவலம் பற்றியும் எழுதப்பட்ட கவிதைகள் கவனயீர்ப்பைப் பெறும் எனக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுக்கமான சொற்பிரயோகத்தைக் கொண்டு மேலும் மெருகூட்டும் வண்ணம் கவிதைகளைப் படைப்பதில் எதிர்காலத்தில் கவனமெடுத்தல் மேலும் சிறப்புக்களைக் கொண்டுவரும்.

2004 களிலிருந்து எழுதிவரும் ரிம்ஸா முஹம்மத் 300க்கு மேற்பட்ட கவிதைகளையும் 100க்கும் மேற்பட்ட நூல் விமர்சனங்களையும் எழுதியுள்ளார். இதழியல்துறை ஊடகத்துறை, கணக்கீட்டுத்துறை ஆகியவற்றில் தடம் பதித்துள்ளார். இவரைப்பற்றிய இலக்கியக் குறிப்புக்கள் உள்நாட்டு, வெளிநாட்டு பருவ இதழ்களிலும், பத்திரிகைகளிலும், இணையத்தளங்களிலும் வெளிவந்து இருக்கின்றன. பல விருதுகளுக்கும் பரிசுகளுக்கும் சொந்தக்காரியான இவர் பூங்காவனம் பருவ இதழின் பிரதம ஆசிரியராக உள்ளார். தொய்வில்லாமல் தொடர்ந்து இலக்கியம் செய்துவரும் ரிம்ஸா முஹம்மத் மேலும் சிறந்த ஆக்கங்களை இலக்கிய உலகுக்கு அளிக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்!!!

வைத்திய கலாநிதி தாஸிம் அகமது
**No. 09, Saunder's Court, Colombo 02.**
**Email – doctorthassim@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துரை

இன்று இலங்கை இலக்கிய உலகில் வெலிகம ரிம்ஸா முஹம்மத் என்பது மிகவும் பரிச்சயமான பெயர். இவரைத் தெரியாத யாரும் நமது தமிழ் எழுத்துலகில் இருப்பார்களா என்பது ஐயத்திற்குரிய விடயமே.

எழுத்துலகில் கால் வைத்த மிகக் குறுகிய காலத்துக்குள் பிரபலம் பெற்றவராக இவர் திகழ்கிறார். தான் எழுதும் கவிதை, கதை, கட்டுரை என்பதற்கு புறம்பாக மற்றவர் எழுதி வெளியிடும் நூல்களுக்கு சிறப்பான முறையில் விமர்சனம் எழுதி அதையும் கஷ்டப்பட்டு, நூலினை வெளியிட்ட நூலாசிரியரின் மனம் புண்படாத ரீதியில் எழுதி, தவறுகளை மிருதுவாக சுட்டிக்காட்டி தனது பணியில் வெற்றிபெற்று வருகிறார்.

நம் நாட்டு தேசியப் பத்திரிகைகள் இவருக்கு வழங்கி வரும் இடமே இதற்கு சிறந்த சான்றாகும்.

இன்று நூலாசிரியர்கள் பலர் இவர் மூலம் தமது நூலுக்கான அறிமுகம் கிடைப்பதை விரும்புகின்றனர் என்பது இவருக்கு கிடைத்திருக்கும் நற்சான்றாகும்.

'எரிந்த சிறகுகள்' எனும் இவரது கவிதைத் தொகுதி இவரால் வெளியிடப்படும் 12 ஆவது (இரண்டாவது கவிதை) நூலாகும்.

கவிதைகள் என்பவை காலத்தின் கண்ணாடி என்றே வர்ணிக்கப்படுகின்றன. ஓர் ஆழமான விடயத்தைக்கூட ஒரு சில வரிகளிலே கவிஞனால் மிக இலகுவாக வெளிக்கொணர முடியும். ஒன்றைச் சொல்லி அதற்கு வேறொரு அர்த்தத்தைக் கற்பிக்கவும் கவிஞனால் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்போர் இலகுவில் புரிந்து கொள்ளும் வகையில் கவிதை படைப்போர் தமது முயற்சிகளிலே வெற்றி பெறுகின்றனர். தமக்கும் புரியாது, வாசிப்போரையும் குழப்பும் கவிதை நூல்கள் வாசகர்களால் புறந்தள்ளப்படுகின்றன.

அந்த வகையில் மிகவும் இலகுவான சொற்களினால் தனது கவிதைகளை ஆக்கியுள்ளார் கவிதாயினி வெலிகம ரிம்ஸா முஹம்மத். கவிதைகளை வாசிக்கும்போதே அது எதைப் பற்றி பேசுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. கவிதையை வெறுமனே சொற்களை வைத்து படைப்பதைக் கொண்டு சிறந்த சுவையான கவிதையாக்கிவிட முடியாது. படித்தவுடன் மனதை ஈர்க்கும் சக்தி அந்தக் கவிதைகளுக்கு இருக்க வேண்டும்.

"சுமாத்ராவில் கருவூலமான
சுனாமியா நீ...

சுதந்திரமாய் இருந்த என்னை
சுக்குநூறாக்கினாய் நீ!

நேர்கோடாய் இருந்த எனை
வானவில்லாய் வளைத்துப் போட்டது நீ.."

என்ற இவரது வரிகள் சுவையாகவும், ஆழமான கருத்தோடும் வந்து விழுகின்றன.

"விழுந்து எழுந்தால்தானே
வெற்றி கிடைக்கும்..
தானாய் வந்தால் அது
மதிப்பை இழக்கும்!"

என்ற வரிகள் தோல்விகளைக் கண்டு துவள்வோருக்கு மீண்டும் எழு என்று தட்டிக் கொடுக்கும் வரிகளாக அமைகின்றன. இவ்வாறு இதயத்தை வருடும் ஏராளமான வரிகளோடு ரிம்ஸா முஹம்மதின் கவிதை தொகுதி நடைபோடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதாயினி வெலிகம ரிம்ஸா முஹம்மதின் கவிதைகள் இன்னும்மின்னும் ஆழமாக வெளிவரவேண்டும். இன்னும் கவிதா உக்திகளை தன்னகத்தே கொள்ளவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். அவ்வாறான ஆற்றல்மிகு கவிதைகளை படைக்கும் ஆற்றல் ரிம்ஸா முஹம்மதிடம் பொதிந்துள்ளது என்பது எமது இலக்கிய உலகின் நம்பிக்கையாகும்.

அவ்வாறான வீச்சுடன் பொருந்திய கவிதை தொகுதிகள் பல ரிம்ஸா முஹம்மதினால் இன்னும் வெளிவரவேண்டும் என மனாதார வாழ்த்துகிறேன்!!!

கவிமணி என். நஜ்முல் ஹுசைன்
இல. 03, ரிச்சர்ட் டி சொய்ஸா
ஊடகவியலாளர்கள் வீடமைப்புத் திட்டம்,
பத்தரமுல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

சாதிக்கப் பிறந்தவளே சரித்திரம் படைக்கிறாள்

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்

தீயாண்டுப் பெற்றார் இவள்

என்பது வள்ளுவர் வாக்கு. ஆம்! அருகே போனால் குளிர்கின்ற தீயாய் இருக்குமிவள் விலகிப் போனால் சுடுகின்ற தீயாய் மாறுகிறாளே என பெண்மையின் தன்மையை அறிந்த வள்ளுவன் பெருமூச்சு விடுகிறான்.

கையொப்பத்திற்காக கட்டை விரலில் மை பூசிய காலம் மாறி, விண்வெளியில் கால் பதித்தவள் இன்றைய பெண். ஒரு அடுப்பங்கரையில் ஊதுகுழலாய் இருந்த காலம் மாறி, உலகையே உலுக்கிவிடும் நெம்புகோலாய் மாறி நிற்பவள் இன்றைய பெண்.

ஆலமரத்தின் விழுதுகள் தம்மை வளர்த்த மரத்தையே தாங்குவதற்கு தரையில் இறங்குவதைப் போல மானுட வாழ்விலும்கூட ஒரு குடும்பத்தின் குத்துவிளக்காய் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் பெண் வேறு யாருமல்ல, எரிந்த சிறகுகள் தொகுதியின் ஆசிரியர் வெலிகம ரிம்ஸா முஹம்மத் அவர்கள்தான். வாழ்வி(ய)ல் வசந்தம், வஞ்சகம், வசந்த வாசல், முரண், மறையாத கவிதை ஆகியன என் மனதை வ(தி)ருடிச் சென்ற சிறகுகள். மணியான வசன நடை வாசிப்போரின் மனதை கவர்வதாய் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு பல்கலைக்கழகத்தில் இதழியில் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுள்ள ரிம்ஸா முஹம்மத் 300 இற்கும் மேற்பட்ட கவிதைகளையும் பல சிறுகதைகளையும் நூல் விமர்சனங்களையும் சிறுவர் படைப்புக்களையும் எழுதியுள்ளார். இவர் பல்வேறு இலக்கிய அமைப்புக்களில் அங்கத்துவம் வகித்து இலக்கிய பணியாற்றி வரும் சிறந்த எழுத்தாளராவார். அது மாத்திரமன்றி பூங்காவனம் காலாண்டு சஞ்சிகையின் பிரதம ஆசிரியரான இவர் பூங்காவனம் இலக்கிய வட்டத்தின் தலைவராகவும் செயற்படுகின்றார்.

எரிந்த சிறகுகளின் சாம்பல்கள் வாழ்வை வசந்தமாக்கிக் கொள்வதற்கான உரமாக மாறி நிற்பதை ரிம்ஸாவின் கவிதை வரிகள் உணர்த்தி நிற்கின்றன. எரிகின்ற சிறகுகளின் ஒளியைக் கொண்டு வாழ்விற்கான ஒளியை பெற்றுக்கொள்ளும் வல்லமையை அந்தக் கவிதைகள் தந்துவிடுகின்றன.

வாழ்க்கையில் தளர்ந்து போனவர்களுக்கு ஒரு ஒத்தடமாய் இந்நூல் இருப்பது நிதர்சனம். ரிம்ஸாவின் இலக்கிய முயற்சி தொடர்வதற்கும், அவரது பணி தீபமாய் சுடர்வதற்கும் என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்!!!

திருமதி. ரதி தேவசுந்தரம்
ஆசிரிய ஆலோசகர் - கண்டி கல்வி வலயம்
முதன்மை ஆசிரியர் - இலங்கை திறந்த பல்கலைக் கழகம்
வளவாளர் - தேசிய கல்வி நிறுவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

வல்ல அல்லாஹ்வைப் புகழ்ந்தவளாகவும் மாநபிக்கு ஸலாம் உரைத்தவளாகவும்..

தென்றலின் வேகம் எனும் எனது முதல் கவிதைத் தொகுதியைத் தொடர்ந்து எனது இரண்டாவது கவிதைத் தொகுதியாக எரிந்த சிறகுகள் தொகுதி வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

மனசுக்குள் மத்தளம் கொட்டும் அனைத்து விடயங்களையும் வார்த்தைகளாய் உருமாற்றி கவிதைகள் எழுதும்போது எனது மனம் சொல்ல முடியாதளவு ஆனந்தம் கொள்கிறது. வார்த்தைகள் கனிந்து கவிதையாகின்றபோது அது வாசிப்புக்கு இனிமை சேர்க்கிறது.

கற்பனைகளைவிட யதார்த்தமாக எழுதப்படுகின்ற படைப்புக்கள்தான் காலவோட்டத்தில் அடிபடாமல் காப்பாற்றப்படுகின்றன. காதலுக்கும் அப்பால் எத்தனையோ விடயங்களை நாம் பேச வேண்டியிருக்கிறது.

ஒரு வாசகனின் வாசிப்பின் அளவு அதிகரிக்கும் பட்சத்தில் அவன் எழுத்தாளனாக, படைப்பாளனாக மாற ஆரம்பிக்கிறான். ஆக வாசிப்பு மனிதனை பூரணமாக்கும் என்ற கருத்துக்கேற்ப படைப்பாளியாக மாறுபவன் சமூகத்தில் கறை படிந்துள்ள விடயங்களை அகற்றி அதற்கான தீர்வை முன்வைக்க முயல்கிறான்.

அதனடிப்படையில் என்னுடைய பெரும்பாலான கவிதைகள், அகவுணர்வு சார் விடயங்கள் உட்பட இன்னோரன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக விடயங்களைப் பேச எத்தனித்திருப்பதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

எனது இந்த நூலுக்கு கனதியான முன்னுரையைத் தந்த பேராசிரியர் துரை மனோகரன் அவர்களுக்கும், நல்லதொரு அணிந்துரையைத் தந்த கவிஞர் டாக்டர் தாஸிம் அஹமது அவர்களுக்கும், சிறப்பான கருத்துரையைத் தந்த கவிஞர் என். நஜ்முல் ஹுஸைன் அவர்களுக்கும், அழகான வாழ்த்துரையைத் தந்த திருமதி ரதி தேவசுந்தரம் அவர்களுக்கும் நூலுக்காக சிறந்ததொரு பிற்குறிப்பைத் தந்த டாக்டர் எம்.கே. முருகானந்தன் அவர்களுக்கும், இந்தப் புத்தகத்தை வெளியிட உதவிசெய்த கொடகே பதிப்பகத்தாருக்கும், அட்டை வடிவமைப்பு மற்றும் கணினி வடிவமைப்பை செய்து தந்த தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவுக்கும், எனது படைப்புக்களைப் பிரசுரித்து உதவிய தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகள், வலைத்தளங்கள் மற்றும் தொலைக்காட்சி, வானொலி அலைவரிசைகள் அனைத்துக்கும், எனது முன்னேற்றத்தில் அக்கறை காட்டி உதவி செய்யும் சகலருக்கும் என் இதயபூர்வமான நன்றிகள் என்றென்றும் உரித்தாகும்!!!

என்றும் மித்ர நேயங்களுடன்,

Weligama Rimza Mohamed
21 E, Sri Dharmapala Road,
Mount Lavinia, Srilanka.

Mobile : 077 5009 222, 0719 200 580
E-mail : poetrimza@gmail.com
FB : Rimza Mohamed
Skype : Rimza123
Website : www.rimzapoems.blogspot.com
: www.rimzastory.blogspot.com
: www.rimzavimarsanam.blogspot.com
: www.rimzasongs.blogspot.com
: www.rimzachildarticle.blogspot.com
: www.rimzapublication.blogspot.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. வெற்றிகள் உன்னை ஆளட்டும்! | 25 |
| 2. வாழ்க்கைப் பூங்காற்று! | 28 |
| 3. தொலைத்த கவிதை | 30 |
| 4. தவிப்பு! | 32 |
| 5. எல்லாம் மாறிப் போச்சு! | 34 |
| 6. என்ன வாழ்க்கை..? | 35 |
| 7. காலங்களின் பிடிக்குள்! | 36 |
| 8. ஒப்பனைகள்! | 38 |
| 9. தீராத மன நதி ஓட்டம்! | 40 |
| 10. சங்கீதமிசைக்கும் சமாதானப் புறா! | 42 |
| 11. சாதல் நன்றே...! | 44 |
| 12. நிகரற்ற நாயனே! | 46 |
| 13. புன்னகைப் பூச்சு! | 48 |
| 14. உயிர் வாழும் உன் சொந்தம்! | 50 |
| 15. ஓர் ஊமையின் பாடல்! | 52 |
| 16. சொல்ல மறந்த சேதிகள்! | 54 |
| 17. மறையாத கவிதை! | 56 |
| 18. நினைவிழக்கும் ஆன்மா! | 59 |
| 19. இருகரம் ஏந்திடுங்கள்! | 61 |
| 20. விளையும் நினைவுகள்! | 63 |
| 21. மெல்லக் கதவுள் மிடுக்காய் ஒளிந்தாள்! | 65 |
| 22. வியர்வையின் விலை...! | 69 |
| 23. உயிர் கசியும் உன் ஞாபகங்கள் | 71 |
| 24. மனிதமில்லாத மனிதன்! | 73 |
| 25. காலத்தின் ஓலம்! | 76 |
| 26. முரண்பாடுகள்! | 78 |
| 27. மனிதர்கள் பலவிதம்! | 80 |
| 28. கறைகள்! | 82 |
| 29. பிரார்த்திப்போம் எந்நாளும்! | 84 |
| 30. எதிரொலி! | 86 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. கவிதைகளோடு மாத்திரம்! 88
32. முரண்! 90
33. தொடரும் தொல்லைகள்! 92
34. மே 01! 94
35. தோல்வி 95
36. எரிந்த சிறகுகள் 97
37. பொய்மை 99
38. வசந்த வாசல் 101
39. தியாகத் திருநாள் 103
40. ஓலைக் குடிசையும் பாதி நிலவும் 105
41. பாராமுகம் ஏனோ? 109
42. நட்பு என்பது எதுவரை? 110
43. சத்தமில்லாத யுத்தம்! 112
44. வஞ்சகம்! 114
45. ஆயுள் கைதி! 116
46. மாற்றமில்லை! 118
47. முகவரி தேடும் மலையகம்! 120
48. இரத்தம் குடித்த காட்டேரி! 123
49. உண்மை அறிந்தவள்! 125
50. இறையோன் தந்த மாதம்! 127
51. இந்நாள்! 129
52. விரைந்தோடி வா! 131
53. வாழ்வி(ய)ல் வசந்தம்! 133
54. அய்லான்! 135

மெல்லிசைப் பாடல்கள்

01. வெயில் நிறத்து தோல் கொண்டு 138
02. வல்லோனின் ஆணை 140
03. கண்கள் உன்னைத் தேடுதடி 143
04. ஆயிரம் சொந்தங்கள் 145
05. ஏன் ஏன் அப்படிப் பார்த்தாய் 147
06. பூக்கள் யாவையும் 149
07. இந்த உலகம் நிலையில்லை 151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. வெற்றிகள் உன்னை ஆளட்டும்!

துன்பங்கள்
உன் நெஞ்சில்
முட்டுகின்றதா?
துயரங்கள்
உன் கதவைத்
தட்டுகின்றதா?

இதயமே
இடிந்து போனதாய்
சாய்ந்து விடாதே!
எதுவுமே
கிடைக்காதது போல்
ஓய்ந்து விடாதே!

சமயம் வந்தால்
இமயமும்
உன் காலடியில்...
இறைவன் நாடினால்
நிச்சயமாக நீ புரளலாம்
கோடிகளில்!

உடைந்து போனால்
உன் மனமும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்து அழுவும்
அனுதினமும்!
தோல்விகள் வெறும்
சம்பவம் தான்...
துணிந்திடு
வெற்றி சரித்திரம் தான்!

நிலா உனக்கு
பன்னீர் தூவும்...
விண்மீன்கள்
வாழ்த்துரைக்கும்!
கானகப் பூக்கள்
உன்னைக் கண்டு
தலையாட்டும்...
விடியலில் உனக்கு
விலாசம் வரும்!

முயற்சியற்று
நீ வாழ்ந்தால்
பின் எப்படி உன் வாழ்வில்
சந்தோசம் தெரியும்?

தைரியம் கொண்டு
நீயிருந்தால்
இன்பக் கனவுகள்
ஓடி வரும்..
கோழையாக வாழ்ந்திருந்தால்
காணாத கவலைகள்
தேடி வரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிட வாழ்வு
சிறந்திடத்தான்
அன்பை இறைவன்
படைத்துள்ளான்...
பண்பாய் வாழ்ந்து
வழிகாட்டி
சிறந்திடச் சொல்லி
அவன் சொன்னான்!

போராட்டமான
உன் வாழ்வு
பூந்தோட்டங்களாய் மாறட்டும்...
வெற்றிகள் என்றும்
உன் வாழ்வில்
புதுமையாக ஆளட்டும்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. வாழ்க்கைப் பூங்காற்று!

உலகத்தின்
உறக்கத்தில்
உண்மை அமைதியாக
சயனித்துக் கிடக்கிறது!
பொய்யோ
விழித்துக்கொண்டு
ஆர்ப்பாட்டம் புரிகிறது!

துயரங்கள் எங்கும்
பரவிக் கிடக்கிறது..
சந்தோஷங்களோ
சற்றும் அசைவின்றி
சமாதியாகி விடுகிறது!

பூஞ்சோலையாக
மலர வேண்டிய வாழ்க்கை..
தகிக்கும் பாலையாக
நகர்ந்து செல்கிறது!



படுக்கையில் கடித்துவிடும்
மூட்டைப் பூச்சிகளாய்
துன்பங்கள் என்
தூக்கம் தின்கின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாறைகளுடன் நான்
சண்டையிட்டிருக்கிறேன் - என்
இதயக் குமுறல்கள்
இந்த உலகில்
எதிரொலிக்கவே இல்லை என்று!

ஆனால்
பூங்காற்று மட்டும் வந்து
என் காதுகளில்
ரகசியம் சொன்னது
வாழ்க்கை வாழ்வதற்கே என்று!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. தொலைத்த கவிதை

அந்த சாலையில் தான்
தொலைத்துவிட்டேன்
என் கவிதையை!

இப்போதுகளில் அதை
கண்டுபிடிக்கவே முடியவில்லை..
கண்டுபிடிக்க வழியுமில்லாதபடி
நான் வெகுதூரம் வந்தாயிற்று
அந்த சாலையைவிட்டு!

மனசு கனக்கிறது
இதயம் வெடிக்கிறது
புதுக்கவிதை வாசத்தில்
நான் சிறகடிக்க நினைத்தாலும்
என்னை
கைவிடாதபடி பற்றியிருக்கிறது
மரபுக் கவிதை!

வியர்வையில்
தேடுகிறேன் உயர்வை..
பழைமையிலிருந்துகொண்டு
பார்க்கிறேன் புதுமையை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில்
கனவுலகில் மிதக்கும்
கற்பனைக் கவிஞன் நான்!

உண்மையில்
அந்த சாலையில் தான்
தொலைத்துவிட்டேன்
என் கவிதையை..
யாராவது கண்டுபிடித்தால்
சொல்லிவிடுங்கள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. தவிப்பு!

தனிமையின் தவிப்பில்
உன்
தொலைபேசி அழைப்புகள்தான்
எனக்கு துணையாகின..

நீ
காலத்தின்
கட்டளைக்கிணங்க
என்னை விட்டுப்போன பின்
துயரங்களே
என் தோழியாகின..

நிமிடங்களின் நகர்வுகள்
எனக்குப் புரிந்தது
யுகங்களாகத்தான்!

உன்
குரல் கேட்பதற்காகவே
என் செவிகள்
தவமிருந்ததை
நீ அறிவாயோ என்னவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைப் பார்க்க
இன்று வருவாய்..
இல்லையில்லை
நாளை வருவாய்
என்றெண்ணியே
என் வாழ்நாள் கழிகிறது!

நாட்கள் சக்கரம் பூட்டி
ஓடும் என்று பார்த்தால்
அவையோ
ஆமை வேகத்தில் நகர்ந்து
என் உயிரை வதைக்கிறது!

என் குழந்தாய்..
திருமணம் முடித்து
வெளிநாடு போன நீ..
இந்தத் தாயைப்
பார்க்க வராமல்
இதயத்தைப் பிளந்தாய்!

மகனே..
உனைக் காணவே
உயிரோடிருக்கிறேன்..
ஒரே ஒருமுறை வந்து
பார்த்துவிட்டுப் போ!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. எல்லாம் மாறிப் போச்சு!

அத்தியாவசியப் பொருட்களுக்கெல்லாம்
விலையென்பது மலையாய் ஆச்சு..
போர் முடிந்த காலம் மாறியும்
சோறுக்கு கஷ்டமாச்சு!

கடலையின் விலையைக் கேட்டு
குடலும் தான் நடுங்கிப் போச்சு..
சுடலைக்குப் போகும் வரை
நிம்மதியே தொலைந்து போச்சு!

ஏழையின் உழைப்புக்கு
மதிப்புகள் இல்லாமலாச்சு..
சம்பளத்தைக் கூட்டிக் கேட்டு
வேலையும் தான் பறிபோச்சு!

மனிதர்களின் கைகலப்பு
சாதிகளின் சண்டையாச்சு..
பலரும் அதில் கலந்ததாலே
நம் நாடும் ரெண்டாய்ப் போச்சு!

பொன்னாடையும் பூமாலையும்
மேடைகளில் நிறைஞ்சு போச்சு..
ஆளுக்கு ஆள் மாலை போடும்
காலம் இப்போ மலிஞ்சு போச்சு!

காணி கார் பங்களா
காசும் சீதனம் ஆயாச்சு..
கன்னியர் வாழ்வு அதனால்
கானல் நீராய் போயாச்சு!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. என்ன வாழ்க்கை..?

வாழ்வின் வட்டம் சகதி நிலை..
வதிவிடமின்றி அகதி நிலை!
வீழ்ந்தனர் முதியோர் இல்லத்தில்
விடிவே இல்லை உள்ளத்தில்!

விதி வழி தானோ நாங்களெல்லாம்
உயிரை மட்டும் சுமந்தவராய்
பாழ்படும் பூமியில் வாழ்கின்றோம்..
படுதுயர் தன்னில் வீழ்கின்றோம்!

வெறிச்சோடும் வீதிகள் போல்
நிம்மதி இங்கு அழிகிறதே..
வேதனை என்னும் மேடையிலே
எங்கள் வாழ்வு கழிகிறதே!

செழிப்புடன் வாழ்ந்தோர் முகத்திலெல்லாம்
பட்டினித் துயர்தான் படர்கிறதே..
சூழ்ந்தது துன்பம் எமைச்சுற்றி
சுகமது உண்டோ வாழ்க்கையிலே???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. காலங்களின் பிடிக்குள்!

இளையவள் என்
வளையல் ஓசையில்
உன் இதயம்
சிக்கிக்கொண்டதாய்
சொன்னாய்!

நான் சிரிப்பதால் தான்
பறவைகள்
இறக்கை விரித்துப் பறப்பதாய்
சொன்னாய்!

அழகிய ரோசாவை
நட்டுவிடக்கூடிய
அழகிய இடம்
என் கன்னக்குழி என்றாய்!

இவற்றைக் கேட்டு
என் உள்ளம்
உன் ஞாபகங்களால்
நிறைந்து விட்டது!

என் இதயப் பூந்தோட்டத்தில்
பூக்கள் நிறையவே
பூக்கத் தொடங்கின!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் அன்பால் கட்டுண்டுதான்
போனேன் நானும்!

எனினும்..
பணத்துக்கு ஆசைப்பட்ட நீ
கொழுத்த சீதனம் தின்று
பங்களா வீட்டின் எஜமான்
என்ற பெயரில்
வேலைக்காரனானாய்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. ஒப்பனைகள்!

வாக்குறுதியின்
மகிமை தெரியாதவர்களெல்லாம்
மேடைகளில்
வாக்குறுதிகளை
அள்ளி வீசுகிறார்கள்!

மனிதநேயம்
துளியுமற்றவர்களெல்லாம்
அதைப்பற்றி
கதைகதையாய்ப்
பேசுகிறார்கள்!

ஏழைகளைப் பார்த்து
நக்கலாக சிரிக்குமவர்கள்
தம் முன்னைய
வாழ்க்கையைப்பற்றி
சிந்திக்கவேயில்லை!

அகம்பாவத்தை
அகம் முழுவதும் சுமந்துகொண்டு
ஆன்மீகம் பேசுவது
வேடிக்கையாக இருக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத் தன்மையற்று
நடக்குமவர்கள்
மகான் என்று
தன்னை சொல்லிக்கொள்வதும்
வாடிக்கையாக இருக்கிறது!

அவர்களின்
முகத்திற்கும் அகத்திற்கும்
சம்பந்தமேயில்லாத பின்
ஒப்பனைகள் மட்டும் எதற்கு
அகற்றிவிடட்டும்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. தீராத மன நதி ஓட்டம்!

சொந்த மண்ணில்
எனக்கோ
சொல்ல முடியாத
சோகங்கள்..
வெந்த மனதில்
புண் கிளரும்
கொடூரமான காகங்கள்!

வெந்துபோன என்
உள்ளத்தில்
வந்துபோனவை
துன்பம் மட்டுமே..
நாதியற்ற என் நிலை
தேதி தெரியாத
முடிவை நோக்கியே!

தீர்ந்துவிட முடியாத
துன்ப ஓடைகளை
வலுக்கட்டாயமாக
கட்டுப்படுத்தினேன்..
என் கண்ணீருக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் கவலைகளை
அடைகாக்கிறேன்!

சொல்லி(ல்) தீராத
சோகங்கள்
தினமும் என்னை
வாட்டுகிறது..
கேள்விக் குறியாய்
என் நிலையை
காலம் வந்து
காட்டுகிறது!

சீரான கதியினில்
என் மன நதி கடந்தாலும்
துயரச் சூரியன் சுட்டெரித்து
வரட்சியாக்கிப் போனது!

உப்பளமாய் படிந்த
சுவைகளை மாத்திரம்
பருகிவிட்டு..
அப்பளமாய்
மனசுடைத்து
கீறல் தருவதும் ஏனது???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. சங்கீதமிசைக்கும் சமாதானப் புறா!

அண்ணார்ந்து பார்த்தேன்..
அழுதபடி காட்சியளித்தது
அகல விரிந்த வானம்!

தினமொன்றிலே
பலதடவை கேட்கும்
வெடிகுண்டுச் சத்தத்தால்
அன்றெல்லாம் ஊர்க்குருவிகளும்
உல்லாசம் மறந்திருந்தன!

ஷெல்வீச்சைக் கேட்டே
பழகிப் போயிருந்தாலும்
எங்கள் உயிர்மூச்சு
ஸ்தம்பித்துப் போனது
உண்மை தான்!

நாலாபுறமும் நோக்கினேன்
திட்டுத்திட்டாக
இரத்தம் உறைந்து
படிந்து கிடந்தது!

முட்டிமோதின
எதிலோ என் கால்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ.. துண்டாடப்பட்ட யாரோ
ஒருவரின் பாதங்கள் அவை!

அகோரமான இந்தக் காட்சியை
படமெடுத்திட இயலாமல்
ஒழிந்து கொண்டது
அப்போது என் இதயம்!

உயிர்பிழைத்த
அந்த சம்பவங்கள்
தற்போது இல்லாமல்
சங்கீதமிசைக்கிறது
சமாதான வெண்புறா!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. சாதல் நன்றே...!

அடிமனதில் புதைந்திருக்கும்
ஆசை நினைவுகள் எழுகிறதே..
கொடி இடையாள் உன் பிரிவால்
நிம்மதி என்னில் தொலைகிறதே!

நித்தம் நித்தம் என் விழியில்
ரத்தம் தான் வழிகிறதே..
யுத்தம் புரிந்து உன் எண்ணம்
வாழ்க்கையை அழிக்கிறதே!

ஏன் பெண்ணே கனவுகளிலும்
நீ வந்தாய் தவறாது..
உன் நினைவிலாவது நானில்லை
சொல் நீ - என் தவறேது?

அன்று
மழைத்துளியின் ஸ்பரிசத்தில்
உன் மலர்வதனம் கண்டேனே..
காதலாகி கசிந்துருகி
உன் ஞாபகம் கொண்டேனே!

பின்பு
வாய்ப்பு வந்த போதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் திறந்து பேசேனே..
உன் திருமண
செய்தி வந்தபோது
என் தவறை உணர்ந்தேனே!

காதலெனும் வெள்ளமெனை
நிர்க்கதியாய் ஆக்கியதே..
சாதல் தான் நன்றென்று
பைத்தியமாய் மாற்றியதே!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. நிகரற்ற நாயனே!

யா அல்லாஹ்!
அலைகளின் நாதத்திலும்
உன் வல்லமையை
இனிதே காணுகிறேன்!

உள்ளத்தை அமைதிப்படுத்த
திக்ர் ஸலவாத்தை
அருமருந்தாய் அருளியவனே!

பொறுமையைக் கொண்டும்
தொழுகையைக் கொண்டும்
துஆ கேட்க வழி காட்டியவனே!

குயிலின் ராகத்திலும் - உன்
குத்ரத்தின் வலிமை தான்
துல்லியமாய் ஒலிக்கிறது..
உன் அருள் மழையால்
இவ்வுலகம் செழிக்கிறது!



நிகரற்ற நாயனே - உன்
நினைவுகளால் என்
கல்பின் பக்கங்களை
நிதமும் சுத்தமாக்குகிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேளிக்கை விளையாட்டை
குழிதோண்டி புதைக்கின்றேன்..
நபிவழியில் சென்று நானும்
நல்லவற்றை விதைக்கின்றேன்!

நான் பயணிக்க வேண்டியுள்ளேன்
இன்னும் தொலை தூரமும்..
தீயவற்றிலிருந்து
என்னைக் காத்திடு
எல்லா நேரமும்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. புன்னகைப் பூச்சு!

உன்
முகத்துக்கு
முற்போக்காய்
முலாம் பூசாமல்
முழுமனதோடு வருகை தா!.

உனது செல்வம்
உனதான அந்தஸ்து
உனக்கு தரப்பட்ட மேடை
உனதே உனதான நாக்கு என்று
உண்மையாய் இல்லாதவற்றையும்
உளறிவிடாதே..

வெறும் பேச்சில் மாத்திரம்
நீ உச்சரிக்கிறாய் வேதம்..
நிஜத்தில் புனிதனாயிருக்காத
நீ சுட்டெரிக்கும் பூதம்!

போலியாய்
வாக்குறுதிகளை
அள்ளி வீசி..
இறுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலியாய் நிற்காதே
மேனி கூசி!

கோர்வையாய் பலதையும்
பேசிவிடாது..
பணிவாய் நடந்திடு
துன்பங்கள் ஏது?

சந்திரனைக் காட்டிக்காட்டி
பொய் கூறியது போதும்..
நீ அரிச்சந்திரனாயிரு
மெய்யாய் இனிமேலும்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. உயிர் வாழும் உன் சொந்தம்!

உன்னுடனான
அன்பு பற்றி கேட்டால்
உறுதியுடன் உயிர்வாழும்
உன் சொந்தம்
நான் என்பேன்!

உதவியாய் நீ
ஏதும் கேட்டால்
முகம் சுழிக்காமல்
முடிந்ததை செய்து
முகம் மலர்வேன்!

பூங்காவில்
உலா வரும்
பூங்காற்றைக் கேள்..
உனை சுமக்கும்
என் இதயம் பற்றி
அது சொல்லும்!



ஆறுதல் கூறும்
என் வார்த்தையை
நீ கேட்டால்
மாறுதல் வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் வாழ்வில்
புதுப்பொலிவு நோக்கி!

தேறுதல் என்
தேகத்தில் கூட நிகழும்
உன் அன்பு
மாறாதிருந்தால்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. ஓர் ஊமையின் பாடல்!

புரிதல்களின்மையின்
ஏக்கத்தோடு
மருண்டு போகிறது
என் இதயப் பறவை..

கணத்துக்குக் கணம்
பணம் பார்த்து
குணம் மாறும்
மானிடர் கண்டு
சுருக்கிக்கொள்கிறது
அது தன் சிறகை!

வேகமாக
மிகவேகமாக
கடந்து செல்லும்
மனிதர்களின்
முகம் பார்த்து
துயரங்கள்
மீள்சுழற்சியாகின்றன..



செயற்கையாகிப்போன
புன்னகையைக் கண்டு
தாழ்வுணர்ச்சிகள் நீள்கின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரக்தியின்
உச்சப் படியில் நின்று கதறி
சோகமாய் முகாரி இசைக்கிறது
என் இயலாமை!

இறுதியாய்
வெட்கத்தோடும்
ஏமாற்றத்தோடும்
அவமானப்பட்டு
தலைகுனிகிறது
என் மனிதாபிமானம்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. சொல்ல மறந்த சேதிகள்!

எல்லோரும் ஏன் என்னை
ஏளனமாய்ப் பார்க்கிறீர்கள்?
செய்வதெல்லாம் செய்துவிட்டு
என்னிடம் ஏன்
கேள்வி கேட்கிறீர்கள்?

பொல்லாத வினைகள்
என்னை சுற்றுகின்றதாலா?
சொல்லாத சுமைகளிங்கே
விடாமல் பற்றுகின்றதாலா?

தேதிகள் தோறும்
நான் சொல்லாத சேதிகள்
தினமும் என்னை வதைப்பதாலா?

அந்தரப்பட்டுப்போன
வாழ்வியல் வழிமுறைகளை
நீங்களே சிதைப்பதாலா?

துன்பங்களே.. துயரங்களே..
உங்களுக்கு எத்தனை மு(ந)கங்கள்
என்னை கொடுமைப்படுத்துவதற்காய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிவரும் காலங்கள்
எனக்கு ஒளி தருமா?
வருடம் புதிதாய் பிறக்கையில்
வழி வருமா?

இத்தனை நாட்களாய்
இல்லை
இப்படியொரு மனத்துடிப்பு...
இப்போதுகளில்
இரவின் கணங்களில்
இதயத்தில் வெடிப்பு!

நிம்மதியற்று உறங்குகிறேன்
பல இரவுகள்...
அத்தனைக்கும் காரணம்
சுயநலமாய் பழகிய
சில உறவுகள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. மறையாத கவிதை!



மரணித்துவிட்டதாக
மனதைக்
கொன்றுவிடும் படியாக
செய்திகள் வந்தன..

தங்கை தங்கை என்று
தயவாய் அழைக்கும்
ஸ்ரீதர் அண்ணா..
சொல்
எங்கு சென்றாய்
எம்மை விட்டுவிட்டு?

காலன் உன்னை
கைது செய்தானா?
எம்மை கதறவிட்டு
அந்தக் காலன் உன்னை
கைது செய்தானா?

ஓவியம்
கேட்க வந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைத் தேடி..
எல்லாவற்றையும்
கொடுத்தாய் நீ
தேடித் தேடி!

கலைத்துறையில் - நீ
படைத்த காவியங்கள்..
காலத்தால் என்றும்
மறையாத ஓவியங்கள்!

பல்கலைத் தென்றல்
என்ற பட்டம் பெற்ற நீ
எம் அனைவர் மனதிலும்
சூறாவளியைத் தந்தது ஏன்
உன் பிரிவால்?

உன் தாயும்
தாய் மாமனும் மட்டுமன்றி
யாவரும்
துடித்துப் போகிறோம்..
இதயம் வெடித்துப் போகிறோம்!

கலைக்காக வாழ்ந்தாய் நீ
கண் போன பின்னும்
சளைக்காது வாழ்ந்தாய் நீ!
நோயுற்ற போது கூட
உன்னைக் காண வராதவர்கள்..
இன்று உன்னை எண்ணி
புலம்பும் சேதிகள்
தெரியுமா உனக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ அண்ணா..
நீ எப்போதுமே
என் மனதில் வாழும்
கவிதை..
என்றும் மறையாத
புதுக் கவிதை!!!

குறிப்பு - அமரர் ஸ்ரீதர் பிச்சையப்பாவின் நினைவையொட்டி எழுதப்பட்ட கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. நினைவிழக்கும் ஆன்மா!

நம் சந்திப்புகள்
சந்தோஷத்தைத் தந்தது
என்னவோ மெய்தான்!

உன் உயர்வுக்கு நானும்
என் உயர்வுக்கு நீயுமாய்
ஏணியமைத்து
வெற்றி காண நினைத்ததும்
மெய்தான்!

கயவர்களின்
கரடுமுரடான வார்த்தையால்
காயப்பட்ட என் இதயம் - உன்
கருணை வார்த்தையாலும்
காருண்ய செயற்பாட்டாலும்
கட்டியெழும்பியதும் மெய்தான்!



ஆனால்..
திடீரென்று
உதறிவிட்ட
உன் உதாசீனத்தால் - என்
உள்ளத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளொன்று சதாவும்
தாக்குவதும் மெய்தான்!

என்னை அமைதிப்படுத்தும்
ஒவ்வொரு கணங்களிலும்
என் ஆன்மா
உன் போலிச் சிரிப்புகளால்
நினைவிழப்பதும்
மெய்தான்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 19. இருகரம் ஏந்திடுங்கள்!

ஆன்மாவைக் கறைப்படுத்தி
அழுக்காக வாழ்வதா?
இஹ்லாஸை மறந்திங்கு
இன்பத்தில் வீழ்வதா?

இளைஞரே யுவதிகளே
இறை தியானம் மறக்காதீர்..
இறுதியில் சுவனம் புகும்
இனிய சந்தர்ப்பம் துறக்காதீர்!

அந்தகார இரவினிலே
அழுது துஆ புரிந்திடுங்கள்..
நிலையான வல்லோனின்
நிகரிலா அன்பை அறிந்திடுங்கள்!

ஒற்றுமையாய் கூட்டாக
தொழுகையை
நிறைவேற்றுங்கள்..
மு:்.மினாய் உங்களை
பறைசாற்றுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டை சச்சரவுகளிலிருந்து
தூர விலகி செல்லுங்கள்..
அண்டை அயலாருடனும்
தூய நட்பு கொள்ளுங்கள்!

இஸ்லாத்தின் கிளை பரப்ப
ஈமானின் ஒளி நிரப்ப..
இருகரம் ஏந்திடுங்கள்..
இறை நினைவில்
வாழ்ந்திடுங்கள்!!!

இஹ்லாஸ் - தூய எண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. விளையும் நினைவுகள்!

தினமும்
என் இதயம்
உன் உருவம் வரைகிறதே..
கணமும்
என் உடம்பு
உருக்குலைந்து போகிறதே!

நிதமும்
உன் நினைவு
இதமாய் இருக்கிறதே..
விடியும் முழு இரவும்
முடிவாய் தொலைகிறதே!

படியும்
உன் நினைவு
வடிவாய் பதிகிறதே..
களையும்
பல கனவு
விளையும்
சில நினைவுகளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிராய்
உணர்வில் கலந்தவனே..
உள்ளத்தை
அன்பால் நனைத்தவனே!

கற்பனைகளில்
க(வி)தைகள் கூறியவனே..
கனவுகளில் வந்து
கவிதைகள் கீறியவனே!

உணர்வுகளில்
உயிரைத் தேடியவனே..
எனக்கு
புது யுகம் காண
புத்தியும் கூறியவனே!

விரக்தியே வாழ்வாய்
வாழ்வே விரக்தியாய்
இருந்த எனக்கு
வாழ்க்கைக்கோர்
அர்த்தம்
சொல்லிக் கொடுத்தாய்
என் உயிரானவனே!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. மெல்லக் கதவுள் மிடுக்காய் ஒளிந்தாள்!

அன்றொரு நாளில்
ஏழை என் தோளில்
சேர்த்திருந்தாளே
என் மனைவி..
ஒரு நாள் புசித்தால்
மறு நாள் பசித்தால்
வாய்திறவாளே என் துணைவி!

படிப்பில் அவள் தான்
புலி என்றுணர்ந்து
அறிந்தேன் பிறகு
நானும்தான்..
அதனாலன்றோ
உழைத்ததையெல்லாம்
அவளுக்கு ஈந்தேன்
உண்மை தான்!



கல்வியில் ஆர்வம்
கலைத்திட பயந்தே
அவளை விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூர நின்றேன்..
அவளுக்காக எதையெல்லாமோ
இழந்திடவும் நான்
துணிந்து நின்றேன்!

உயர் படிப்பெனக்கு
உற்ற நண்பி தான்
என்று சொல்லியே உருக்குலைந்தாள்..
படிப்பு பரீட்சை
என்று கூறியே
கால் நடையாக
அவள் அலைந்தாள்!

ஒவ்வொரு நாளும்
காலை மாலையென
பாடங்கள் படித்தே
கழித்திட்டாள்..
பரீட்சையில் ஒருநாள்
வெற்றி பெற்றதால்
ஆனந்தத்தில் மகிழ்ந்திட்டாள்!

காலத்தின் கோலம்
மாற்றியதவளை
கோடியாய் அவளும்
உயர்ந்திட்டாள்..
இனி நமக்கெதற்கு
உற்ற துணையென
என்னையும் தான் அவள்
ஒதுக்கிவிட்டாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வத்தின் செருக்கில்
செந்தமிழ் மறந்து
ஆங்கிலம் தனையே
உச்சரித்தாள்..
படிக்காதெவரும்
கண்டு பேசினால்
பண்பற்றவரென நச்சரித்தாள்!

அறிவும் ஞானமும்
ஒன்றுசேரவே
அறியாமை மக்களை
அவமதித்தாள்..
ஆணவம் கொண்டு
வாழ்கின்ற வாழ்வில்
ஏழைகளையே
அவள் மிதித்தாள்!

அவளைத் தேடிய
அவளை நாடிய
பாமர மக்களை
அவள் வெறுத்தாள்..
உதவிகள் என்று
கேட்டு நின்றதால்
அவர்கள் வந்தாலே
முகம் கறுத்தாள்!

பதவிகள் உயர்ந்திட
பணமழை தூவிட
அதிகாரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மிதந்தாள்..
ஆடம்பரமாய்
வாழ்வு களித்து
ஆண்டவனையும்
அவள் மறந்தாள்!

இத்தனை செல்வம்
இன்பமாய் இருந்தும்
இறைவனின் நாட்டம்
எதுவென்றால்..
ஆழிப்பேரலை கொடூரமாக
வந்தழித்ததை
தன் விதி என்றாள்!

தள்ளி ஒதுக்கிட்ட
அத்தனைப்பேரும்
அவளுக்கன்பு காட்டிடவே..
கணவன் என்னைக்கதி
என்றெண்ணி
காலங் கடந்து வந்திட்டாள்!

அவளொரு பேதை
என நான் அறிவேன்..
மன்னித்து அவளை
ஏற்றிட்டேன்..
வெட்கம் கொண்டு
கதவிடுக்கினிலே
ஒழிந்து கொண்டு
நாணிற்றாள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. வியர்வையின் விலை...!

தொழில் என்றாலே
சோகமாய் விடியும்
அதிகாலை..
காரணம்
முப்பது நாட்களும்
மூர்க்கதனமான வேலை!

மேலதிக வேலைகளாலும்
பெருக்கெடுக்குது
ஆறாக வியர்வை..
எனினும் வாழ்வுச் சூழலோ
இதுவரை காணவில்லை
உயர்வை!

முதலாளி வர்க்கத்துக்கு
இன்றியமையாதது
தொழிலாளர்கள் எம் பலம்..
ஆயினும்
மாத இறுதியில் கிடைப்பதோ
சொற்ப தொகை சம்பளம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்து உழைத்து
களைத்துப் போனாலும்
உணர்வாரோ எம்
வியர்வையின் விலை..
எப்பாடுபட்டாலும்
தீர்ந்துவிடுமா
எமைத் தாக்கும்
துன்ப அலை???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. உயிர் கசியும் உன் ஞாபகங்கள்

கணப்பொழுதொன்றில்
ரணப்படுத்திப் போன
உன் நினைவுகளை
துடைத்தெறிய
முடியாதபடியான
தவிப்பு எனக்குள்!

வாழ்வு கசந்து போன
நிமிடங்களில் எல்லாம்
கடற்கரை மணலிடம்தான்
கவலைகளைக்
கொட்டிவிடுகிறேன்!

தன் பயணம் குறித்த
அதி தீவிரமுடைய
கழுகைப் போன்றே
உன் மீதான நேசமும்
உயர்ந்தபடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலி அன்புகளால்
காயப்பட்ட இதயம்
அசலையும் சந்தேகிப்பதில்
தவறில்லைதானே!

உதறித்தள்ளி
உதாசீனப்படுத்திவிட
நானொன்றும்
திமிர் பிடித்தவளில்லை!

உண்மைகளுக்காக
உயிரை இழக்கவும்
சம்மதம்தான்!

உண்மையாக இருக்க
உன்னால் முடியுமென்றால்
சொல் - என்
உயிரை
உனக்காக மட்டும்
பத்திரப்படுத்துகிறேன்!

துகள்களாக சிதறிப் போன
என் இதயத்தை
அள்ளியெடுத்து
உன் கைகளில்
ஒப்படைக்கிறேன்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. மனிதமில்லாத மனிதன்!

வாழ்வு கழியும்
ஒவ்வொரு நொடியும்
விஷப் பரீட்சையாய்
தோன்றுகிறது எனக்கு!

தாயே..
என்னைவிட்டு நீ போய்
வருடங்கள் பன்னிரெண்டானது
விளங்குகிறதா உனக்கு?

நான் தவிக்கையிலே
தனியாகிப் போகின்றனர்
தலை தடவ வேண்டிய சொந்தங்கள்!

எனக்கு மாத்திரம்
குற்றம் சொல்லிச் சொல்லியே
பொறுப்புக்களைத்
தட்டிக்கழிக்கின்றனர்
இந்த பந்தங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல் தீண்டாத
வீணை எனக்கு
வீண் பழி சுமத்துகிறார்கள்..
விளையாட்டாய்
எண்ணிக்கொண்டு
என் மனசை
'செல்போனாய்' அழுத்துகிறார்கள்!

தாய் மடியில்
தூங்கிய காலங்கள்
எனக்கு நினைவில் இல்லை..
ஆனால் என்னைத் தேற்ற
என்னருகில் இப்போது
என் தாயே இல்லை!

சிரித்துப்பேச இயலவில்லை..
என் சிந்தை கலைந்து
தவிக்கிறேன் சதாவும்..

பன்னிரண்டு மணி தாண்டியும்
கண்ணிரண்டில் தூக்கமில்லை..
சிறு வயது காலத்தில்
இது போன்ற துக்கமில்லை!

காலமும்
என் அமைதியும்
நிறைய பேசிவிடும்
நான் வாய் திறக்காமலேயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள்
உறங்கிப் போனதால்
என் வாய்க்கும் கூட
இப்போதுகளில்
பூட்டுப் போடப்பட்டாயிற்று!

என் சந்தோஷங்களை
திருடிக்கொண்டு
தென்றலும் பொய்யாய்
வருடிச் செல்கிறது என்னை!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. காலத்தின் ஓலம்!

இருளின் போர்வைக்குள்
சிக்குப்பட்டுப்போன
சூரியனுக்கே
விடிந்தால்
விலாசம் வருது..

போரின் வடுக்களுக்குள்
அகப்பட்டுப் போன
மக்களுக்கு
எப்போது விலாசம் வரும்..?

அழகாய் கனவு காண
ஆசைப்படுகிறார்கள்..
பாவம்..
நிம்மதியாய்
தூக்கம் வராமல்
அல்லல்படுகிறார்கள்!


வண்ணாத்திப் பூச்சியின்
வண்ணம் காண
தினமும் முனைகிறார்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்..
காலுடைந்த சிட்டுக்குருவியாய்
கிடந்து அழுகிறார்கள்!

யுத்தம் முடிந்த இந்நாட்டில்
சத்தமில்லாப் பொழுது புலர்கிறது..
எனினும்
விலைவாசி ஏற்றம் கண்டு
உலைப் பானை காய்ந்து
உலர்கிறது!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. முரண்பாடுகள்!

நீ கடலில் முத்தெடுக்க
ஆசைப்படுகிறாய் - ஆனால்
மூச்சடக்க அச்சப்படுகிறாய்!

வெற்றிக் கம்பத்தைத் தொட
நினைக்கிறாய் - ஆனால்
தோல்விகளைத்
தாண்ட மறுக்கிறாய்!

உயரப் பறக்க கனவு
காண்கிறாய் - ஆனால்
இருந்த இடத்திலேயே
இருந்துகொள்கிறாய்!

வெளிச்சத்தை தேட
நினைக்கிறாய் - ஆனால்
இருளைக் கண்டு
அச்சப்படுகிறாய்!

பூப் பாதைகள்
வேண்டும் என்கிறாய் - ஆனால்
கற்களையும் முற்களையும்
கடக்க மறுக்கிறாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஷ்டம் போல வாழ
ஆசைகொள்கிறாய் - ஆனால்
கஷ்டப்பட்டு உழைக்க
மறுத்துவிடுகிறாய்!

தொழிலதிபராக
கனவு காண்கிறாய்
சிறிய நட்டங்களை
தாங்க பயப்படுகிறாய்!

அதிகாரம் செய்ய
ஆசைப்படுகிறாய் - ஆனால்
கட்டளைகளுக்கு அடிபணிய
மறுக்கிறாய்!

சிம்மாசனத்துக்காய்
பாடுபடுகிறாய் - ஆனால்
வறியோர் துயரைத்
துடைக்க மறுக்கிறாய்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. மனிதர்கள் பலவிதம்!

பொறாமைதனை நெஞ்சில் ஏற்றி
பொருமிப் பொருமி அலைகிறான்
எருமைபோல் நடந்துகொண்டு
ஏமாறுபவன் இருக்கிறான்!

பேராசையால் மூளை மங்கி
பேந்த விழிப்பவன் இருக்கிறான்
பேராசையினால் போட்டிபோட்டு
பணக்காரனானவன் இருக்கிறான்!

பெண்ணாசை பித்துப் பிடித்த
பெரிய மனிதன் இருக்கிறான்
பொன்னாசையால் விழிகள் பிதுங்கி
பொறாமைப்படுபவன் இருக்கிறான்!

காசு கொடுத்து தீயது செய்து
காசினியில் வாழ்பவன் இருக்கிறான்!
மாசு கொண்ட உள்ளத்தாலே
பாசம் பொழிபவன் இருக்கிறான்!

பேனை பிடித்து பெயருக்காக
எழுதும் மனிதன் இருக்கிறான்
'போனில்' பேசி பெண்களையெல்லாம்
ஏமாற்றுபவன் இருக்கிறான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டி உண்டு வாழ்க்கையிலே
வயிறு வளர்த்தவன் இருக்கிறான்
முட்டி நிறைய கள்ளு, சாராயம்
காய்ச்சி விற்பவன் இருக்கிறான்!

பக்தி கொண்டு நல்லவனைப்போல்
பணிந்து நடப்பவன் இருக்கிறான்
கத்தி கொண்டு பிறரைமிரட்டி
காசு பறிப்பவன் இருக்கிறான்!

மாடி வீடு, காரு, காசு
தேடித் திரிபவன் இருக்கிறான்
பதவி, அதிகார ஆசை பிடித்து
பல்லு இளிப்பவன் இருக்கிறான்!

கண்ணகி பற்றி கவிதை, கதையென
எழுதிக் குவிப்பவன் இருக்கிறான்
கற்பழித்து பெண்களையே
காமுறுபவன் இருக்கிறான்!

பொய்யை மட்டும் சரியாக
பேசும் மனிதன் இருக்கிறான்
மெய்யை மட்டும் மருந்துக்குக்கூட
உச்சரிக்காதவன் இருக்கிறான்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. கறைகள்!

கறை படிந்த வரலாற்றில்
கவலைகள் ஏராளம்
அகதியாய்ப் போனோரில்
ஆற்றாமைகள் தாராளம்!

இருபத்தொரு வருடங்கள்
இதயத்துடிப்பு மறந்து..
ஊரெண்ணியிருக்கிறார்கள்
ஆசைகளைத் துறந்து!

வடபுலத்து மக்களவர்
வெடவெடத்தல் மறக்கலாமோ?
இட நிலபுலன் யாவையும்
இழந்த சோகம் ஈடேறுமோ?

வயோதிபரும் நோயாளியும்
வருத்தத்துடன் நடைநடந்தே
தண்ணியின்றி தவித்தபோது
மனம் கொதித்த கதை கொடிது!



ஆடு கோழி மீன் என்றே
ஆக்கிச் சோறு தின்றவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சிக்கும் வழியின்றி
காய்ந்திருந்தார் அவனியிலே!

இன்றும்தான் அலறுகின்றார்
நடந்தவற்றை நிதம் எண்ணி
அவர்களுக்காய் விடியல் தர
எத் தலைவன் குரல் கொடுப்பான்?

ஒரு தேச மக்களென
எல்லோரையும் மதித்திங்கு
ஆதரிக்கும் ஒரு தலைவன்
எங்கிருந்து முன்வருவான்???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. பிரார்த்திப்போம் எந்நாளும்!

காலங்கள் கடந்தாலும்
கலை ஞானம் நிலைக்கச் செய்த
ஆசானே உம் நினைவுகள்
என்றென்றுமே வாழ்ந்திருக்கும்!
கற்போர்க்கு வழிகாட்டி
கல்விக்கு உயிரூட்டி
உத்தமராய் உதித்தீரே
நம்மண்ணில் விடிவிளக்காய்!

நல்லாசானாய்
அதிபராய்
உயர் அதிகாரியாய்
பல பரிமாணங்கள் பெற்று
வெலிகமை மண்ணுக்கு
பெருமை சேர்த்தீரே!
மாணவச் செல்வங்கள்
மதிப்புடனே வாழ்ந்திட
பண்பாகப் படிப்பித்து
பார்போற்றச் செய்தீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய மாணவருள்
அறபாவில் நீர் மட்டும்
பேராதனை பல்கலைக்கழகத்தின்
பட்டதாரியானீரே!
இவ்வுலகக் கல்வியுடன்
சன்மார்க்கம் இலக்கியம் என
சாதனைகள் புரிந்தீரே
சரித்திரமாய் திகழ்ந்தீரே!

ஈருலக வெற்றிக்கும்
அயராது உழைத்த உம்மை
ஜன்னத்துல் பிர்தவ்ஸ்
சுவன வாயில் வரவேற்க..
பிரார்த்திப்போம் எந்நாளும்
பிரார்த்திப்போம் என்றென்றும்!!!

குறிப்பு - வெலிகமயைச் சேர்ந்த அதிபர் மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஹுஸைன் அவர்களின் நினைவையொட்டி எழுதப்பட்ட கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. எதிரொலி!

எதிர்பார்ப்புக்கள் ஏதுமின்றி
நானிருந்தபோது
எனக்கு வைரமாக
நீ கிடைத்தாய்..
வைரத்தின்
பெறுமதி நான் அறிகின்றபோது
என்னை விட்டுப் பிரிந்தாய்!

பல கேள்விகள் உண்டு
என்னிடம் - அங்கு
விடைகள் உண்டா உன்னிடம்?

நீ
என் நினைவுகளின்
ஆணி வேராகிப் போனதாலா
எண்ணங்கள் யாவும்
உன்னைப் பற்றியே
கிளை விரித்திருக்கின்றன?

காலத்தின் கட்டாயங்களுக்கு
கட்டுப்பட்டு - நீயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்துக் கொண்டிருக்கிறாயா
என்னைப் போலவே?

உன்னை மறக்க வேண்டும்
என்ற உண்மையை மட்டும்
அடிக்கடி
நினைத்துக் கொள்கிறேன்..
அங்கும் உன் நினைவுகளே
உந்தப்படுகின்றன!

எனது ஒவ்வொரு
சிறிய வெற்றிக்குமான - உனது
முதலாவது கைதட்டல்
இன்று எனக்கு கேட்கவேயில்லை!

வார்த்தைகளில் வடிக்கவியலா
எனது துன்பங்களை
பெருமூச்சுக்களாய்
மொழிபெயர்த்திருக்கிறேன்!

பாறையில் எதிரொலிக்கும்
என் துயரக் குரல்
என்றோ ஒருநாள்
உனக்குக் கேட்கும்
என்ற நம்பிக்கையில்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. கவிதைகளோடு மாத்திரம்!

கடல் தாண்டிச் சென்ற
உன் பிரிவு தாளாமல்
நான் சந்தோஷமின்றியிருக்கிறேன்..

உன் அருகில் இருந்தபோது
நிகழ்காலத்தின் நிம்மதி
உணர்ந்திருக்கிறேன்..

உனதான
அன்புப் பறிமாற்றங்களால்
எத்தனை முறை
மகிழ்ச்சியிலாழ்த்தியிருக்கிறாய்!

எனைப் பிரிந்த உன் வாழ்வு
எப்படிக் கழிகிறதோ..
கழிவிரக்கம் இல்லாமல்
காலம்தான் கழிகிறதோ?

கனவோடும் கற்பனையோடும்
காத்திருக்கும் - என்
காலம் பற்றி உன்னிடம்
காற்று சொல்லவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கை கோர்த்து
நான் நடந்த கடற்கரையும்
நான் தனியாயழுவதைக் கண்டு
துயருருகிறதே..

கடல் நுரை..
பறவைக் கூட்டங்கள்..
குயிலின் நாதம்..
எதுவுமே மகிழ்ச்சி தரவில்லை!

உன் காதலோடு
நான் வாழ்வதால்
கவிதைகளோடு மாத்திரம்
கலந்துறவாடுகிறேன்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. முரண்!

வேதனையின் வலியால்
துடிக்கிறாயா?
கலங்காதே.. நிச்சயமாய்
உனக்கொரு வழி பிறக்கும்!

கவலைகளை உன்னுடன்
காவிச் செல்லாதே..
அவை உன்
செல்போன் அல்லவே?

சிகரம் தொட நினைக்கும் நீ
சின்ன குறைகளுக்கும்
மனம் தளரலாமா?

பகலும் இரவும்
இல்லையெனில்
நாட்கள் எப்படி நகரும்?

இன்பமும் துன்பமும்
இணைந்ததே மனித வாழ்க்கை..
இது இயற்கையின் நியதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிக்குப் பெறுமதி
இருப்பது போலவே
இருளுக்கும் பெறுமதியுண்டு!

இனிப்பை மாத்திரம்
நீ விரும்பினால்
மாத்திரைகளால்
உன் நோய் சுகமாவதெப்படி?

அஸ்தமனத்துக்குப்
பிறகுதான்
உதயம் என்பதை
மறக்கலாமா?

விதைகளை நட்டால்தானே
விருட்சங்களை
எதிர்பார்க்க முடியும்?

துன்பங்களில் நீ
சிக்கியிருப்பதாய் துவண்டுவிடாதே..
உனக்காக சிம்மாசனம்
காத்திருக்கிறது வெற்றியோடு!

இயற்கையில் இல்லை பிளவு..
இரண்டும் இணைந்ததே உலகு!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33. தொடரும் தொல்லைகள்!

வலை வீசி கஷ்டப்பட்டும்
வருமானத்தைக் காணோம்...
விலைவாசி ஏற்றத்தால் நாம்
வழியிழந்து போனோம்!

எங்கள் அடுப்புக்கள்தான்
எரியவில்லை - ஆனால்
வயிறெரிகிறது
பசியாலும் ஆத்திரத்தாலும்!

கவலைப்படாதீர்கள்
என்று சொல்ல பலருண்டு - எனினும்
வழிவகையைக்
காட்டித் தருவோர் எவருண்டு?

இருட்டில் நிகழும் திருட்டுக்கள்
ஒழிக்கப்படுகின்றன...
பகலில் நிகழும் திருட்டுக்கள்
அழிக்கப்படுகின்றன!

இரத்தத்தை உறிஞ்சுவது
அட்டைகள் மாத்திரமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டையர்களாய்
பலரிருக்கின்றனர்!

நாங்கள் மனிதர்கள்..
தோளேறி சவாரி செய்ய
கழுதைகளல்லர்!

சுனாமி
கிறீஸ் மனிதன்
மண்சரிவு
எதுவும் தேவையில்லை..
எமை வீழ்த்த இந்த
விலைவாசி போதும்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34. மே 01!

உரிய ஊதியமின்றி
சுரண்டப்பட்ட உழைப்புக்கு
விடிவு கிடைத்த நாள்!

முதலாளிமாருக்கு
அடிமைகளாயிருந்த
வாழ்க்கைக்கு
முடிவு கிடைத்த நாள்!

பாட்டாளிகளுக்கு
கூட்டாளிகள் சேர்ந்து
குரல் கொடுக்கும் நாள்!

தொழிலாளர்களின்
உரிமையை
வென்றெடுத்த நாள்!

வியர்வைக்கு
விலை குறிக்கப்பட்ட நாள்!

வறுமையின் வேர்களைப் பிடுங்க
முயற்சிப்பவர்களின் நாள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. தோல்வி

மனிதனைப்
புடம்போட்டு
புதிதாக
பிறக்க வைக்கிறாய்!

நீதான் என் ஆசிரியன்.
வாழ்க்கைப் பாடங்களை
கற்றுத் தருகிறாய்!

நீ முதலில் தருவது
கவலைகளையல்ல
சந்தோஷத்தின்
படிக்கற்களை!

விழுந்து எழுந்தால்தானே
வெற்றி கிடைக்கும்..
தானாய் வந்தால் அது
மதிப்பை இழக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரில் மூழ்கியவன்தான்
சிரிப்பின் தாற்பரியத்தை
அறிந்தவன்!

போராட்டம்தான்
இன்ப நீரூற்றின்
அத்திவாரம்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36. எரிந்த சிறகுகள்

என் இதயம்
வடிக்கும் கண்ணீரை
உன்னால்
பார்க்க முடியுமா?

தளுதளுக்கும்
என் குரலை
உன்னால்
கேட்க முடியுமா?

நீ அருகேயிருந்தால்
துன்பங்கள் கிட்டவர
அச்சம் கொள்ளும்..

நீ தூரப்போனால்
அவை என்னை
ஆக்கிரமித்துக் கொல்லும்!

என்னைக் குருவி குருவி என்று
கூப்பிடுவாயே..
இப்போது இந்தக் குருவியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறகுகள் எரிந்து
பொசுங்கிவிட்டன!

உன்னுடன் என்னால்
உயரப் பறக்க முடியவில்லை..
உனை மறந்து
தனியாய் பறக்கவும் இயலவில்லை!

பழி சொல்லும் இந்த உலகில்
வாழவே அச்சப்படுகிறேன்..
எனக்கொரு
வழி சொல்லிவிடு!
வதைத்தது போதும்
வந்தென்னை
வாழ வைத்துவிடு!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. பொய்மை

என் ஏணியாக நீயும்
உன் ஏணியாக நானும்
பொறாமையின்றி வாழ்ந்த
காலங்கள்
கனவு போல இருக்கிறது!

உன் ஞாபகங்கள்
என்னை
ஆட்டங் காணச் செய்கிறது..
உன் பிரிவு
என்னை தடுமாற வைக்கிறது!

கூட்டத்திலும் தனிமையிலும்
உன் முகம் தெரிகிறது..
பகிர்ந்து கொள்ளவியலா
சோகங்களால்
உடலும் மனதும் எரிகிறது!

புன்சிரிப்பு தொலைந்து
அகம் முழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்களாக வலிக்கிறது..
பிறரின் சிரிப்புக்கு
என் உதடுகள்
போலியாக சிரிக்கிறது!

உதிரும் இலைகளாகவும்
துளிர்க்கும் இலைகளாகவும்
மாறி மாறி - உன்
நினைவு நெருடுகிறது!

ஒவ்வொரு நாளும்
எதிர்பார்க்கிறேன்
உன் வருகையை.. ஆனால்
அவை தருகின்றன
சதாவும் பொய்மையை!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. வசந்த வாசல்

எல்லாம் விதி
என்று பழகிப்போன
என் வாழ்க்கை
ஏமாற்றங்களால்
நிறைந்திருந்தது!

துன்பங்களின் இறுதி அத்தியாயம்
முடியும் வரை காத்திருக்கிறேன்..
இனி மகிழ்ச்சி தொடங்கும்
என்ற நம்பிக்கையில்!

துயரங்களால்
துரத்தப்பட்ட என் வாழ்வு
இனி பூக்களால்
அலங்கரிக்கப்படும்!

எல்லோரும்
இராமர்கள்தானே..
தத்தமது இராவணக் குணங்கள்
அம்பலமாகும் வரை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால்

குற்றம் சொல்லியே
பழகிப்போன
சுற்றத்தாரும் இனிமேல்
என்னைத் தேடி வருவார்கள்!

என்
கண்ணீரைத் துடைத்தெறிந்து
பன்னீரை ஏந்தியிருக்கிறேன்..

வசந்த வாசலில்
எனக்கான தென்றல்
வீசிக்கொண்டிருக்கிறது!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. தியாகத் திருநாள்

ஹஜ்ஜுக்குச் செல்வதனால்
அல்லாஹ்வின் அருள்பெறலாம்
தூதர்கள் வழியதனை
தூயதாய்ச் செய்திடலாம்!

இப்றாஹீம் நபியவர்தான்
இஸ்லாமிய இலட்சியத்தால்
இனிதான புதல்வரையும்
இழந்திடத் துணிந்தாரே!

ஹாஜரா அம்மையாரும்
அராபியப் பாலையிலே
வல்லவன் கட்டளையை
வாஞ்சையுடன் செய்தாரே!

சிறுகுழந்தை இஸ்மாயிலும்
சீர்குலைந்த இப்லீஸின்
சூழ்ச்சியை உணர்ந்துகொண்டு
உயிர்விட விரும்பினாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்பலம் கரைந்தாலும்
உயிர்விட்டுப் பிரிந்தாலும்
கஃபாவைக் காணும் ஆவல்
மக்களை ஆள்கிறதே!

ஆட்டைப் பலிகொடுத்த
நிகழ்வதை நினைவுகொள்ள
குர்பான் வழக்கம் தான்
இன்றுவரை தொடர்கிறதே!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. ஓலைக் குடிசையும் பாதி நிலவும்

வாழ்க்கையை மாற்றிட்டு
எமைச் சூழ்ந்த வறுமை - என்றும்
எம் வானில் விடியாத கருமை!
யாரென்ன சொன்னாலும்
எவரென்ன செய்தாலும்
மறக்காமல் வாழ்கிறோம்
நாளை வரும் மறுமை!

உடைந்து தொங்குது
என் குடிசைக்கூரை - வார்த்தோமே
வீடு பணம் சுனாமிக்குத் தாரை!
பொல்லாத கஷ்டங்கள்
பல வந்தபோதும்
அல்லாஹ்வைத்தவிர
நம்பினோம் யாரை?

அந்நாளில் என்னிடம்
எத்தனை காரு - இன்றெல்லாம்
எனைச் சுற்றிக் கஷ்டம்தான் பாரு!
பஞ்சம்தான் வந்தாலும்
கொஞ்சம்தான் தின்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிட்டு வந்தோமே
ஊர்விட்டு ஊரு!

அன்றவர்கள் எனைப் பார்த்து
பணம் பண்ணக் கற்க -
இன்றவர்கள் முன் வேலைக்காய்
கைகட்டி நிற்க - மதியாமல் என்னிடம்
லஞ்சம்தான் கேட்டு
நின்றவர் எல்லோர்முன்
என் மானம் விற்க!

படிக்கின்ற புள்ளைகள்
பசியால தவிக்க - என்னால
முடியல்ல இனிமேலும் சகிக்க
எங்கிட்ட கடன்கேட்ட
அத்தனைப் பேரும்
நான் கேட்டுப் போனதும்
வந்தாங்க மிதிக்க!

உறவினர் மீதான உறவைத்
துறந்து - அவர்களின் சந்தோம்
துக்கம் மறந்து
பணக்காரருக்கும்
அந்தஸ்துள்ளோருக்கும்
தானம் செய்தலா
உண்மை விருந்து!

வெளியூரு போறேன்னு
நான் போன போது
சம்பளம் தராமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தினான் பாடு!
நான் செய்த பாவம்தான்
ஏதென்று அறியேன்
எந்நாளும் சூழுது
என்னைத்தான் தீது!

துன்பங்கள் வந்தால்
எங்கே நாம் ஓட..
விதியின் விளையாட்டில்
மனசெல்லாம் வாட!
படச்ச றப்புதான்
எங்கள என்றும்
காப்பாத்த வேணும்
வேறென்ன பாட?

பாவங்கள் முழுசாக
எம் நெஞ்சில் நீக்கம்
அல்லாஹ்வின் ரஹ்மத்து
உள்ளத்தில் தேக்கம்!
தொழுகையும் நோன்பும்
ஸக்காத்தும் செய்ய
வரவேண்டும் இதயத்தில்
உற்சாகம் ஊக்கம்!

குர்ஆனின் ஓசை
பலமாய் ஓங்க - பலாய் முஸீபத்
முழுசாய் நீங்க..
பள்ளிக்குச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகக் கூடி
ஓதிடுவோமே நன்றாக நாங்க!

ஓலைக் குடிசையில்
ஏழையின் சீவியம் -
இரவினில் கூரையில்
பால் நிலா ஓவியம்!
நாள் முழுதும் காய்ந்தாலும்
பல காலம் மாய்ந்தாலும்
சோகமாய்த் தொடருது
துன்பத்தின் காவியம்!

செல்வமாய் வாழ்ந்தது தான்
எந்தன் மடமை -
இஸ்லாத்தைத் தவிர
இன்றில்லை உடமை!
தீமைகள் தவிர்த்து
தீன் வழி நடந்து
வாழவேண்டியது
அடியேனின் கடமை!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41. பாராமுகம் ஏனோ?

மதியை இழக்கச்செய்து
விதியை மாற்றுகின்ற
வித்தைகளை - மனிதா
நீ விட்டுவிடு!

துணையாய்
அல்லாஹ்வை ஏற்று
இணையில்லா அவன் அருளை
குறைகளின்றி பெற்றுவிடு!

பொடுபோக்குத் தன்மை
களவு பொய்களை
மனிதா - நீ
இன்றே நீ மாற்றிவிடு!

ரஹ்மத் தரும் சட்டங்களை
மனமுவந்து மதித்து
படைத்தவன் திருநாமம்
என்றும் போற்றிவிடு!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42. நட்பு என்பது எதுவரை?

நட்டைப் பற்றி அறிந்தோமா
இதுவரை?

அன்று

தோளுக்குத் துணையாகினார்
தோழர்கள் - துன்பத்தை
துடைத்த பண்பாளர்கள்!

நெருக்கடியில் கைகொடுக்கும்
நேயர்கள் - நேர்மை எனும்
வழிசெல்லும் தூயர்கள்!

அன்பை சொரிவதிலே
மாரி - துன்பத்தில்
வழங்கிடுவார் வாரி!

இன்று

தோள் சுமக்கும்
துயரானார்கள் - தினம்
கழுத்திறுக்கும் கயிறானார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசுடைத்து வாட்டி
எடுப்பார்கள் - எமை
பிறரிடமும்
காட்டிக் கொடுப்பார்கள்!

கடன்கேட்டு வரும்போது
சிரித்திடுவார்கள் - கொடுத்த
கடன்கேட்டு நாம் போனால்
கழுத்தறுப்பார்கள்!

பை பார்த்து பணமிருந்தால்
பழகிடுவார்கள்
பை காலியெனத் தெரிந்ததுமே
விலகிடுவார்கள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. சத்தமில்லாத யுத்தம்!

சுமாத்ராவில் கருவூலமான
சுனாமியா நீ..
சுதந்திரமாய் இருந்த என்னை
சுக்குநூறாக்கினாய் நீ!

நேர்கோடாய் இருந்த எனை
வானவில்லாய் வளைத்துப் போட்டது நீ!
உதாசீனத்தால் உதறித்தள்ளி
உள்ளத்தை உடைத்துப் போட்டதும் நீ!

உன் பார்வை வாள் பட்டதற்கு
என்னுள் பெரிய காயங்கள்..
அந்த காயத்தினால் வெளுத்தது
போலிப் பாசத்தின் சாயங்கள்!

காதல் மந்திரத்தை கற்றுத் தந்தவனே
இதில் என்ன ஞாயங்கள்..
காதலே தெரியாதிருந்த என்னை
கண் கலங்க வைத்ததில் என்ன மாயங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாவும் எனக்குள்ளே உன்
எண்ண அலைகளே அடிக்கின்றது..
துடிக்கின்ற இதயம்
இப்போது நன்றாக நடிக்கின்றது!

உனைப் பார்க்கச் சொல்லி
மனசு என்னிடம் அடம்பிடிக்கின்றது..
பரவசமாய் இருந்த நெஞ்சம்
உன்னால் பஞ்சாகி வெடிக்கின்றது!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44. வஞ்சகம்!

வாஞ்சையுடன் பழகுவதற்கு
சிலராலும் முடிவதில்லை..
வஞ்சகமாய் நடிப்பதற்கோ
பலராலும் முடிகிறது!

உள்ளத்தால் நெருங்குவதற்கு
சிலரால்தான் முடிகிறது..
உள்ளத்தை உடைப்பதற்கு
பலராலும் முடிகிறது!

எந்தப் புற்றில்
எந்தப் பாம்பு உள்ளதென்று
யாரறிவார்?

அதுபோலத்தான்
யார் மனதில்
என்ன உள்ளதென்பதும்!

தலைகுனிந்து பொறுத்ததெல்லாம்
தலை நிமிர்ந்து
வாழ்வதற்குத்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்காக ஒரு ஜீவன்
எப்போதும் இருக்க வேண்டும்..
அந்த எதிர்பார்ப்பில்தானே
வாழ்க்கை அடங்கியிருக்கிறது!

நட்பு என்ற வார்த்தை
நயவஞ்சகத்தை ஏற்றிருப்பதால்
உண்மையான ஒரு சில
உறவுகள்தான்
சாகும்வரை தொடருமென்பேன்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45. ஆயுள் கைதி!

என் இதயம் எனும்
ஜன்னலினூடே
மின்னலாய் நுழைந்தவனே..

தென்றல் வீசிக்கொண்டிருந்த
என் உள்ளத்தில்
புயலை வீசச் செய்தவனே..

கனவில் நீ வந்து
என் கன்னத்தில்
இட்ட முத்தம்
இன்னும் ஈரலிப்பாகவே
இருக்கிறது தெரியுமா?

உன் மீது
நான் கொண்ட அன்பை
வார்த்தை கொண்டு
வெளிப்படுத்தத் தெரியாமல்
ஊமையாகி நிற்கின்றேன் இப்போது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் எழும்
ஓசைகள்கூட
இயற்கையோடு கலந்துவிட்ட
குயிலின் கானம் போல
பயனில்லாமலேயே போய்விட்டது!

உன் பேச்சினாலே
என்னைச் சிறைப்பிடித்தவனே
அதில் ஆயுள் கைதியாய் இருக்கவே
ஆசைப்படுகிறேன் எப்போதும்
சத்தியமாய்
உனக்காக மட்டுமே!

எனக்குள்
மாற்றங்களைத் தந்துவிட்டு
எதுவும் தெரியாதது போல்
எப்படித்தான் இருக்கிறாயோ?

நீயில்லாத வாழ்வு
இங்கு கசக்கின்றது..
அதை எண்ணுகையில்தான்
என் மனது கனக்கிறது!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46. மாற்றமில்லை!

நிலவற்ற
அமாவாசை போன்றே
என் வாழ்க்கை இப்போதும்!

விடை தெரியாத விடுகதையாக
பயமுறுத்துகிறது
எதிர்காலம்!

தாயே!
நீயில்லாத இந்த உலகம்
பன்னிரெண்டாண்டுகள் கழிந்தும்
துன்பம் மாறாமல்..
அதுபோன்றே
எனக்குள் துளி சந்தோசமும் நீளாமல்!

மரணத்துள்
சுகமாக நீ தூங்குகின்றாய்
நானோ தினமும்
கண்ணீருக்குள் மூழ்குகின்றேன்!



அரக்கர்கள் வாழும்
இந்த உலகத்தில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியும் வாழ
அச்சப்படுகின்றேன்..
இனி நீ போன
பாதைதான் எனக்கும்
மிச்சப்படுகின்றது!

ஒய்யாரமாய் நான்
நடந்து போவதாய்
பலரும் எண்ணக்கூடும்
என் கால்களின் நடுக்கத்தை
காணாததால்!

தெரியுமா உனக்கு?
இந்த உலகில் இறைவன் படைத்த
வானம் பூமி கடல் மலை
எதுவும் இன்னும் மாறவில்லை
மாறவேயில்லை
என் வாழ்க்கையைப் போலவே!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 47. முகவரி தேடும் மலையகம்!

முகவரி என்பதன்
முதலெழுத்து எங்கே
முகவரி தரப்போகும்
முதல்வனும் எங்கே?

ஆண்டாண்டு காலங்கள்
ஆட்சியினைப் புரிந்தார்கள்
தொழிலாளியான எம்மை
தொலைதூரம் எறிந்தார்கள்!

பச்சையணி தேயிலை மலையில்
இச்சையோடு துரையிருப்பான்
கொழுந்தை பெண்கள் பறித்தாலும்
கொடும் பேச்சால் துளைத்தெடுப்பான்!

எம் பாட்டில் நாமிருந்தோம்
துணையின்றி வாழ்ந்திருந்தோம்
அவர் பாட்டுக்கு ஆடச் சொன்னார்கள்
அவர் மெட்டுக்கு பாடச் சொன்னார்கள்
ஆட்டங்கள் ஓயவில்லை - இன்னும்
எமக்கு ஓய்வும் இல்லை!



சிங்கமாய் கர்ஜித்தோம்
சிற்றெரும்பாய் ஆக்கிவிட்டார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டுக்களாய் சிறகசைத்தோம்
சிறகிரண்டை உடைத்துப் போட்டார்கள்!

ஒரு கையில் பொட்டலமும்
தலையிலொரு கூடையுமாய்
மறுவேளை உணவுக்காய்
மலைக்கு நாம் புறப்படுவோம்!

கைகட்டி வாய்பொத்தி
கைதியாய் இருக்கின்றோம்
கணக்குப் பிள்ளையின் முன்
கடுகாக சிறுக்கின்றோம்!

கவலைகள் மறப்பதற்கு
கசிப்பொன்றும் மருந்தில்லை
ஆனாலும் அதைவிட்டால்
எம்மவர்க்கு வழியில்லை!

பொருளாதாரச் சுமை
பொறுமையை சோதிக்குது
பணங்காசு குறைஞ்சதால
படிப்பை அது பாதிக்குது!

நெருப்பெட்டி குடில்களில்
நெரிசல்கள் தினம் நிகழும்
நித்தம் எம் துயர்கண்டே
நிலவோடு இரவு அழுவும்!

மழைச் சாரல் அடித்தாலும்
வெயில் கொளுத்தி எரித்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விலொரு மாற்றமில்லை
வழிதெரிய ஏற்றமில்லை!

மலையக மைந்தர்களே
மனசில் இதைப் பதித்திடுங்கள்
இனியாவது நாம் மிளிர
இனிய விதி படைத்திடுங்கள்!

முகவரி என்பதன்
முதலெழுத்து ஆகிடுங்கள்
முகவரி தந்திடும்
முதல்வனாய் மாறிடுங்கள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 48. இரத்தம் குடித்த காட்டேரி!

சிட்டாக விளையாடிக்கொண்டிருந்தது
பூக்காத சிறுமொட்டு..
அதனிடம் பூவைக் காட்டி
அழைத்துச் சென்றது
இரத்தம் குடிக்கும் காட்டேறி!

பூ முகத்தைப் பார்த்து
பூவைக் காட்டி மறைவுக்கு
இழுத்துச் சென்றது அந்த மிருகம்..

பின்..
காட்டேறியின் விலங்குணர்வுக்கு
கன்றுக்குட்டி இரையானது!

மிருகங்களைக் கொன்று
இரத்தம் குடித்த அந்த வெறியன்..
இறுதியில்
இரக்கமேயின்றி பாலகியை
பதம் பார்த்துவிட்டு
தலைமறைவானான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரபலி கொடுக்கும்
மூட நம்பிக்கையில்
மூழ்கிப்போன தாயின்
மகனல்லவா இவன்?

அவனுக்கு
நோன்புடன் களைத்திருந்த
சிறுமியின் உயிர்
தேனாக இருந்திருக்குமோ?

அல்லாஹ்வே
அநியாயக்காரர்களுக்கு
நீயே போதுமானவன்
நீதியான தண்டணை வழங்க!!!

குறிப்பு - 2012.08.05 இல் வெலிகமயில் ஒரு காமுகனால் புனித ரமழான் மாதத்தில் கொலை செய்யப்பட்ட அப்ரா என்ற சிறுமிக்காக எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49. உண்மை அறிந்தவள்!

வெயிலில் எரிகிறாளா
குளிரில் உறைகிறாளா
உணவு உண்டாளா
உறக்கம் தொலைத்தாளா
என்ன செய்துகொண்டிருப்பாள்?

கைச்சேதப்பட்டு இப்படி ஆனாளா
அல்லது பிள்ளைகள்
கைவிட்டதனால் இப்படி ஆனாளா?

பாதையோரம் அவளுக்கு வீடு
உடைந்த குடை
அந்த வீட்டின் கூரை!

வேளாவேளைக்கு உணவு..
படைத்தவனுக்குத் தெரியாதா
படியளக்க?
ஏதோ சாப்பிடுகிறாள்!

ஒரு போத்தல் தண்ணீரை
முடியில் ஊற்றியூற்றிக் குடிக்கிறாள்..
தண்ணீரின் பெறுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் எல்லோரையும்விட
அவளுக்குத் தெரிந்திருக்கிறது!

சொந்தங்கள் இல்லை அதனால்
சோகங்களும் இல்லை
பொதியொன்றைத் தவிர
அவளிடம் வேறெதுவுமே இல்லை!

உலகம் நிரந்தரமில்லை என்பதை
உலகுக்கு அறிவிக்கும்
ஞானி அவள்!

அதனால்தான்
பேராசை, பொறாமை,
டாம்பீகம், வீண்பெருமை
எல்லாம் மறந்து
அவளது உலகில்
இன்பமாயிருக்கிறாள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50. இறையோன் தந்த மாதம்!

ஏழைகள் வாழ்வினை
யாவரும் புரிந்திட
வந்திடும் ரமழான் மாதம்

மானிடர் எங்களை
தூயவராக்கிட
இறையோன் தந்த மாதம்

நன்மைகள் புரிந்திட
நபிவழி நடந்திட
புறப்படும் எங்கள் பாதம்

ஒவ்வொரு அமலையும்
ஒழுங்காய் செய்திட
உரைத்திடும் ரமழான் மாதம்

உலகில் வாழ்கிற
உயிரினம் யாவையும்
மதித்திடும் இஸ்லாம் வேதம்

இம்மை வாழ்வையும்
மறுமை வாழ்வையும்
உணர்த்திடும் புனித மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமைகள் தந்திடும்
தீங்குகள் செய்திடும்
நிகழ்வுகள் தொடருது நாளும்

முஸ்லிம்கள் நாமும்
மு.்.மினாய் வாழ்ந்தால்
இன்னல்கள் மறைந்து போகும்

லைலத்துல் கத்ர்
இரவு என்பதே
நாட்களில் சிறந்தது ஆகும்

வருத்தும் பிணிகள்
கவலைகள் யாவும்
எம்மை விட்டுப் போகும்

பலரினை வெறுத்தும்
பகைதனை வளர்த்தும்
கழியுது எங்கள் காலம்

நடப்பவை சிலதும்
நடந்தவை பலதும்
காலம் தந்த காயம்

அல்லாஹ் சொன்ன
அமல்களை நாங்கள்
சரியாய் செய்தால் போதும்



வசந்த தென்றல்
வருடி மெல்ல
எங்கள் நெஞ்சை மோதும்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 51. இந்நாள்!

பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக
மாறுவதாய் எண்ணி
நவநாகரீக மங்கையாய்
மாற்றியிருக்கிறதா இந்நாள்?

பலவருட காலங்கள்
பரிதவித்த பாவையர்க்கு
உலகம் கொடுத்த
உயர்ந்த பரிசா இந்நாள்?

நன்னாளாய் உதித்து
நானிலம் போற்ற
நங்கையர் வாழ்வுக்கு
நலம் சேர்க்குமா இந்நாள்?

மங்கையர் தினமென்று
மார்தட்டிக் கொள்ள
மங்கையர்க்குரிய மானத்தை
தந்திடுமா இந்நாள்?

'அடுப்பூதும் பெண்களுக்கு
படிப்பெதற்கு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற காலம்போய்
துறைகள் யாவற்றிலும்
மிளிர்வதற்கு உதவுமா இந்நாள்?

வருடமொரு முறை வெறும்
பேருக்காக வந்துவிட்டு
ஆணினத்தின்
அடக்குமுறைக்கு
மீண்டும்
அடித்தளமிடுமா இந்நாள்?

இனிவரும் காலம்
இனிமையாய் வாழ
பெண்ணினத்துக்கு
வாழ்த்துச் சொல்லுமா இந்நாள்???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 52. விரைந்தோடி வா!

இறந்தகாலம் முடிந்திற்று..
நிகழ்காலமும் கழிந்திற்று..
எதிர்காலம் நமக்காக
பன்னீர் தூவி வரவேற்கும்!

என் இளமையின்
பாதங்களில்
உன்னுடைய சுவடுகள்..
கரை தேடும் அலையாக
காதலின் நினைவுகள்!

வாழ்வென்றாலும்
சாவென்றாலும்
உன்னுடனே சேருவேன்..
வாடைக்காற்றை சாட்சியாக்கி
உனக்கிதை நான் கூறுவேன்!



உன் கைகோர்த்து
நடக்கும் சமயங்களில்
கவலைகள் யாவும்
காலடியில் வீழும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனையில் உனை எண்ணி
நானே ரசித்தேன்..
பிடிக்காத பாவற்காயையும்
இனிப்பாக ருசித்தேன்!

அர்த்த ராத்திரி தூக்கத்தின்
கனவுகளில் வண்ணங்கள்..
கருவறைக் குழந்தையாய்
தலைகீழாய் எண்ணங்கள்!

என் அகத்தைப் புரிந்த
ஆருயிர் நீ..
என் வாழ்வை பகிரும்
உரிமையும் நீ!

எங்கிருக்கிறாய் எனைவிட்டு
என் மன்னவா..
உனக்காக காத்திருக்கிறேன்
விரைந்தோடி வா!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 53. வாழ்வி(ய)ல் வசந்தம்!

உள்ளிழுத்து வெளிவரும் - என்
உஷ்ண மூச்சுக் காற்று
இதயத்தின் ரணங்களை
மொழிபெயர்க்கும்!

என் வீட்டு ஜன்னல் கதவு
என் மன ஓலத்தை எதிரொலிக்க
ஒத்தாசை புரியும்!

காயப்பட்ட என் நெஞ்சம்
வேதனை தாங்காமல்
விம்மித் துடிக்கும்!

நித்திரை வராத
நிலவுப்பொழுதுகளில்
கண்கள் மட்டும்
கண்ணீர் வடிக்கும்!

செத்துப் போன என் வாழ்வு
சில சொப்பனங்களால் மாத்திரம்
தினம் நகரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசித்து வலிக்கும்
என் உணர்வுகள் - எப்போது
நிம்மதியை உணரும்?

கடந்து போன காலங்கள்
உயிரை உடைத்து
வலிகள் தரும்!

ஆனபோதும் நிச்சயமாய்
ஒருநாள் எனக்கு
வசந்தம் வரும்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 54. அய்லான்!



பிஞ்சுக் குழந்தை உனக்கு
மஞ்சம் கொள்ள - ஒரு
மடியில்லாமல் போனதா?
தஞ்சம் பெறும் வழி - இனி
இல்லை என்று ஆனதா?

சர்வதேசத்தையும்
திரும்பிப் பார்க்க வைத்த
சிரியாவின்
சின்னவீரன் நீ!

ஆக்ரோஷித்து ஆர்ப்பரிக்கும்
அந்தக் கடலலைகளுடன் - நீ
எப்படித்தான்
போராடியிருப்பாய்?

அய்லான் குர்தி...
கடலோரம் - நீ
கவிழ்ந்திருந்ததைக்
கண்டு உறைந்தது
எம் குருதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதமிழந்த
மனிதர்கள் வாழும்
யுத்த பூமியடா இது!

தேசம் விட்டு ஓடியதெல்லாம்
இனியும்
செத்துப் பிழைக்க
முடியாதென்றல்லவா?

ஆனாலும்
யுத்தத்தின் கோரப் பற்கள்
உன்னைவிடாமல்
கௌவியதே!

உன்னைப் போன்ற
சிறார்களை அழித்த
இந்த யுத்தம்
இனி வேண்டாம்
என்றைக்குமே!!!





குறிப்பு:- சிரியா நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தின் போது 2015 செப்டெம்பர் மாதம் துருக்கிய கடற்பரப்பில் மூழ்கி, உலகையே உலுக்கிய சிரி(றி)ய சிறுவன் அய்லான் குர்திக்காக எழுதப்பட்ட கவிதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லிசைப் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. வெயில் நிறத்து தோல் கொண்டு

**பல்லவி**

ஆண்: வெயில் நிறத்து தோல் கொண்டு
குயில் போல கதைப்பவளே
துயில் கொள்ளப் போகையிலே
மெயில் கொஞ்சம் பார்ப்பாயா?

பெண்: உன் போனில் ரிங்டோனாய்
என் குரலைப் போட்டவனே
கண் துயில போகையிலே
இன்பாக்ஸை பார்ப்பாயா?

**சரணம் 1**

ஆண்: இதயத்தின் நான்கறையில்
இன்பமாக உன் நினைவு

பெண்: இதை நானும் உணர்வேனே
இங்கேயும் உன் கனவு

ஆண்: ஏ.. பெண்ணே...
நீ என்னை என்ன செய்து
உள்ளத்தில் ஒழித்துக்கொண்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்: ஏ பையா...
இரு விழிக்குள் எனை இருத்தி
இமைகளால் அணைத்துக்கொண்டாய்
(வெயில்)

**சரணம் 2**

ஆண்: காதலிலே தோல்வியில்லை
காதலர் தோற்பதில்லை

பெண்: சாதலிலே பயன்களில்லை
சாதனை ஏதுமில்லை

ஆண்: அன்பே நீ...
எனக்காக பிறந்தவளே
எனக்காய் மலர்ந்தவளே

பெண்: கண்ணா நீ...
முதல் குழந்தை நீதானே
முத்தங்கள் தருவேனே
(வெயில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. வல்லோனின் ஆணை

**பல்லவி**

வல்லோனின் ஆணை
வரமாய் நினைத்தே தினமும்
வாழ்ந்திடுவோம்..
நோன்பின் புனிதம்
மனதினில் ஏற்றே
நன்மையின்பால் விரைவோம்!

**அனு பல்லவி**

இம்மை வாழ்க்கையும்
மறுமை வாழ்க்கையும்
சிறந்திட ஆசைகொள்வோம்
உண்மையின் பாதையில்
உயிர் துறப்பதற்கு - நாளும்
துணிந்து நிற்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம் - 1**

வறியோரின் பசிபோக்க
வழிகாட்டுவோம் - நாம்
ஏழைகள் வாழ்வினிலே
எழில் கூட்டுவோம்..
மனத்தூய்மை கொண்டே - நாம்
மறை ஓதுவோம் - தினம்
இறைபோற்றி அளிவில்லா
அருள் வேண்டுவோம்!

லைலத்துல் கத்ர் என்ற
இரவொன்றினை - ரமழானில்
தந்திட்டாய் யா ரஹ்மானே..
சுவனமாம் ரய்யானில்
வீற்றிருப்போமே - ஸவ்ம் என்ற
நோன்புகளை நோற்பதினாலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம் – 2**

துஆக்களும் திருநாளில்
கபூல் ஆகுமே - அந்த
ஷைத்தான்கள் பயத்தாலே
வெருண்டோடுமே..
உடல் பிணியும் நீங்கும்
இந்த ரமழானிலே - எம்
உணர்வுகளும் சீராகும்
இது போதுமே!

உலகத்து மாந்தரே
கேட்டிடுவீரே - ஸக்காத்தும்
ஸதக்காவும் வழங்கிடுவீரே..
மக்கத்து மாணிக்கம்
நபிபெருமானின் - நாமத்தில்
ஸலவாத்தும் சொல்லிடுவீரே!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. கண்கள் உன்னைத் தேடுதடி

**பல்லவி**

கண்கள் உன்னைத் தேடுதடி
கண்மணியே கண்மணியே
நெஞ்சம் உன்னை நாடுதடி
என்னுயிரே என்னுயிரே

**அனு பல்லவி**

தாரகைக் கூட்டம் பார்க்கையிலே
உன் சிரிப்பு கண் எதிரே
தாமரைப் பூ பார்க்கையிலே
உன் கண்கள் நினைவினிலே

**சரணம் 1**



கனவுகளில் வந்து கீதமிசைத்தாய்.. எனை
வாவென்று அழகிய கண்கள் அசைத்தாய்..
மனசுக்குள் புகுந்து ஊஞ்சல் ஆடினாய்
எனக்கு மட்டும் நீ ஏஞ்சல் ஆகினாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் தேகம் இரண்டிலும் ஆட்சி புரிகிறாய்
நீ எனக்கென பார்வையால் சாட்சி பகர்கிறாய்

உன்னருகில் வாழ்ந்திருந்தாலே
உலகமொரு சுவர்க்கமே....

**சரணம் 2**

காதலோடு நீ என்னைப் பார்க்கிறாய்..
பார்வையால் எந்தன் கவலை தீர்க்கிறாய்
தென்றலாக மாறியே தீண்டிப் போகிறாய்..
தெரியாதது போல் தாண்டிப் போகிறாய்

இதயத்தில் மகிழ்ச்சி காட்டிச் செல்கிறாய்..
இயல்பான என்னை மாற்றிக் கொல்கிறாய்

உன்னருகில் வாழ்ந்திருந்தாலே
உலகமொரு சுவர்க்கமே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. ஆயிரம் சொந்தங்கள்

**பல்லவி**

ஆயிரம் சொந்தங்கள்
அருகிலே இருந்தென்ன
என்னவளே என்னருகே
நீயிருந்தா போதுமடி

ஆயிரம் சொந்தங்கள்
அருகிலே இருந்தென்ன
என்னவளே என்னருகே
நீயிருந்தா போதுமடி

**சரணம் 1**

கண்மணியே உனக்காக
கவிநூறு நான் படைப்பேன்
கண்ணீரை நீ உதிர்த்தால்
கலங்கியே மனம் துடிப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் உடம்பில் உள்ள வரை
உனக்காக நானிருப்பேன்
உனைப் பிரிந்தால் மறுகணமே
உயிர் நீங்கி நான் இறப்பேன்

**சரணம் 2**

பூ மேல பனித்துளியா
விழி ரெண்டில் பதிஞ்சிருக்க
காற்றாக தினம் மாறி
எனைச் சுற்றி நெறஞ்சிருக்க

குயில் கூவும் இன்னிசையாய்
இதயத்தில் நீயிருக்க
நட்சத்திர அழகெல்லாம்
நடுநெற்றியில் வரஞ்சிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. ஏன் ஏன் அப்படிப் பார்த்தாய்

**பல்லவி**

ஏன் ஏன் அப்படிப் பார்த்தாய்?
ஏன் ஏன் அப்படி சிரித்தாய்?
ஏன் ஏன் அப்படி ரசித்தாய்?

பேருந்தில் கைப்பிடித்தேன்
பேசாமல் நின்றிருந்தாய்
மெதுவாக நகர்ந்து வந்தேன்
மெல்ல நீ விலகிச் சென்றாய்

**சரணம் I**

வாசனை மலர்களிலே - உன்
வார்த்தை தெறிக்குதடி
பாசமாய் பார்க்கையிலே - என்
ஜீவன் மரிக்குதடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரிகை போல் வந்து
என்னை வரைந்தாயடி
கிறங்கிடச் செய்கின்ற
அழகால் அறைந்தாயடி

**சரணம் 2**

காவலில் வைத்த மனசை
காவிச் சென்றாயடி
கட்டுண்டு மிதந்திருந்தேன்
கள்வன் என்றாயடி

குளிர்ச்சியான நதியைப்போல்
நெஞ்சில் விழுந்தாயடி
கிழக்கிலே சூரியன் போல்
என்னுள் எழுந்தாயடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. பூக்கள் யாவையும்

பல்லவி

பூக்கள் யாவையும்
என் கண்கள் காணுதே..
உன்னைக் காணாத நெஞ்சு
குழந்தை போல் ஏங்குதே..

இதயத்தின் அறைகளிங்கு
இருட்டாகக் கிடக்குதே..
உன்னைச் சுற்றியே தினம்
மனப்பறவை பறக்குதே..

சரணம் 1

வெளியே தெரியும் பாலைவனம்
உள்ளத்தில் கொதிக்குதே..
வாழ்க்கையின் சுவடுகளை
காலம் என்னில் பதிக்குதே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்கின்ற நாட்களெல்லாம்
நரகம் போல் எரிக்குதே..
இந்த மனம் என்றும்போல்
உன் நினைப்பால் தவிக்குதே..

நெஞ்சம் வலிக்குதே..

(பூக்கள் யாவையும்)

**சரணம் 2**

நிலவு இங்கே ஈரமின்றி
அக்கினி போல் மாறுதே..
தென்றலாக வரும் காற்று
புயல் போலச் சீறுதே..

உன்னோடு சேரும் நாளை
உணர்வுகள் தினம் வேண்டுதே..
ரகசியக் கனவுகளை
நாளும் இமைகள் தேடுதே..

மனம் வாடுதே..

(பூக்கள் யாவையும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. இந்த உலகம் நிலையில்லை

பல்லவி

இந்த உலகம் நிலையில்லை
வாழும் வாழ்க்கையும் நிலையில்லை
புரியும் நாள் எப்போது?
பயனில்லை அப்போது!

புரியும் நாள் எப்போது?
பயனில்லை அப்போது!

சரணம் I

வேதனை வாழ்வில் இருந்தாலோ
வல்லவன் அவனிடம் முறையிடு
சோதனை தந்திடும் ஷிர்க் வழியில்
சேர்ந்து நீ திரிவதை மறந்துவிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியர் அவர்களின் மனதறிந்து
அன்புடன் பழகி இனிமை கொடு...
இஸ்லாத்தை அவர்கள் உணர்ந்துவிட
அவர்களுக்கோர் வாய்ப்பு கொடு

(இந்த உலகம்)

**சரணம் 2**

நன்மை செய்வதிலே பல தயக்கம்
ஆடம்பரங்கள் மீதுதான் மயக்கம்
எல்லாம் அழிந்துபோகும் ஒருநாளில்
அன்று பயனில்லை உன் வாழ்க்கை!

நபியின் வார்த்தைகள் முத்துக்கள்
நாம் தேட வேண்டிய சொத்துக்கள்
மறுமைநாள் அருகில் வரும்போது
மாண்ட நிமிடங்கள் திரும்பாது!

(இந்த உலகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தென்றலின் வேகத்தை" கவிதை நூலாக 2010 இல் பேச வைத்த வெலிகம ரிம்ஸா முஹம்மத், இப்பொழுது "எரிந்த சிறகுகள்" சிலிர்த்தெழ, மனம் தழுவிக் கவி இசைக்கும் மற்றொரு தொகுப்புடன் உங்கள் முன் நிற்கிறார். 2004 இல் "நிர்மூலம்" கவிதையுடன் தினமுரசில் ஆரம்பித்த இவரது இலக்கியப் பயணம் 300 க்கு மேற்பட்ட படைப்புகள் கண்டும் அடங்காத கவித் தாகத்துடன் நித்திய ஜனனமாகிறது.

மெல்லுணர்வுகளை தேன் தமிழில் தீட்டுவது இவர் சிறப்பு. மாணவனை மிரட்டி தோல்விகளைத் திணிக்கும் கேள்வித் தாள்களைப் போலன்றி, அரவணைத்து கரம் பிடித்து உடன் பயணிக்க வைக்கும் தெள்ளிய சிந்தனை ஓட்டம். சொற் சிலம்பமாடி மருட்டாத எளிதான மொழிநடை. இதனால் வாசகனுடன் இணக்கமாகிறார். படைப்பாற்றலுடன் நுண் ரசனை உணர்வு கொண்டவராதலால் சிறப்பான நூல் விமர்சனங்களையும் தந்து வருகிறார்.

சூரியன் எப்.எம், இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவை மாதர் மஜ்லிஸ், சக்தி எப்.எம், ஊவா எப்.எம், நேத்ரா ரீவீ, டான் ரீவீ, செரண்டிப் ரீவீ போன்றவற்றுடன், இணையம் உள்ளிட்ட இலத்திரனியில் ஊடங்களில் பிரபலமான ரிம்ஸா முஹம்மத் இலங்கையின் முன்னணி பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் ஆகியவற்றினூடாகவும் தனது படைப்பு வெளியை இலக்கிய உலகெங்கும் பரவுதல் செய்கிறார். இவற்றிற்கு மேலாக பூங்காவனம் கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும் இலக்கியப் பணியாற்றுகிறார். பரிசுகள், பாராட்டுக்கள், பொன்னாடை, கௌரவ விருதுகள் என பல்வேறு தரப்பிலிருந்தும் இவரின் துடிப்பான ஆற்றலுக்கு அங்கீகாரங்கள் தேடிவருகின்றன.

மனித நேயமும், சமூக முன்னேற்றத்தில் அக்கறையும் கொண்ட இப் படைப்பாளி பெண்ணியம், காதல், சீதனப் பிரச்சனை, இனப் பிரச்சனை உள்ளிட தன்னைச் சுற்றி நடக்கும் எல்லா அவலங்களையும், சக மனிதர்களின் பாடுகளையும் பாடுபொருளாகக் கொள்கிறார். வாழ்வின் வசந்தங்களுக்காகவும் மற்றொரு புறத்தில் கானம் இசைக்கின்றார். இமயங்களைக் குன்றுகளாக்கி நாண வைக்கும் படைப்பாற்றலுடன் இவரது பயணம் தொடர வாழ்த்துகிறேன்!!!

டாக்டர் எம்.கே. முருகானந்தன்



Rs. 400/=

ISBN 978-955-30-6388-5

**எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவட் லிமிடட்**

661, 665, 675, மருதானை வீதி, கொழும்பு 10.

தொலைபேசி: (011) 2685369, 2686925, 4-614904

godageem@slt.lk www.godage.com

Designed By : H. F. Rizna

Erintha Sirahuhal (Poems)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org